# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 3 இதழ் : 1 டிசம்பர் 2023




# ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

நம்பிக்கை, நாணயம், நேர்மை, நிலையான தன்மையுடன் மக்கள் சேவையில்

## "தலைமுறைகளை கடந்து வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள உங்களுடன்"

ஒன்றாக நாம் வளர்வோம்

**ரூ.1,00,000/-**
முதல்
**ரூ.1,00,00,000/-**

வரையிலான மதிப்புள்ள சீட்டுகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம்



77th ANNIVERSARY

எங்களின் வெற்றிப்பயணத்தில் மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

WWW.SREEVISALAM.COM   +91 86670 03356

நகரத்தார் வாசிப்பில் ஓர் அங்கமாக அனைவரது மேலான ஆதரவுடன்

# 3 வது

ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம்.

தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறோம்.

## நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

www.naamnagarathar.com

97917 76534

# வளவுக்குள்...



வாசகர்களுக்கு அன்பு வணக்கம்...!

வெற்றிகரமாக இம்மாதம் தனது இதழியல் பயணத்தில் மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது உங்கள் நாம் நகரத்தார் மின்னிதழ்.

ஒரு சிறு தாவரம் போல் தோன்றியது இன்று தனக்கென்று ஓர் இடத்தை அந்தச் சிறு தாவரம் உருவாக்கிக்கொண்டிருக்கிறது. இம்மாத பதிப்பு நம் மின்னிதழின் 25 வது இதழ்.

அனைவரது அபரிமிதமான அன்பும், ஒத்துழைப்பும் காரணமாக எதிர்பார்த்ததை விட மிக அதிகமான அளவில் உலகளவிலான நகரத்தார் பெருமக்களிடம் நாம் நகரத்தார் மின்னிதழ் சென்று சேர்ந்தது. வாசகர்கள் அனைவரிடமும் இந்த புதிய முயற்சிக்கு பெரிய வரவேற்பு இருந்தது.

இன்றுவரை உங்கள் அனைவரது ஒத்துழைப்பால் உலகளவில் நகரத்தார் பெருமக்களை வாட்ஸப், முகநூல், டிவிட்டர் போன்ற சமூக ஊடகங்கள் வாயிலாக வெற்றிகரமாக சென்றடைந்து கொண்டிருக்கிறது. உண்மையில், இது நாம் நகரத்தாரின் மின்னிதழின் வெற்றியல்ல, இது முழுக்க முழுக்க வாசகர்களாகிய உங்களது ஈடுபாட்டால், பங்களிப்பால், பகிர்வுகளால் தொடர்ந்து நீங்கள் அளித்து வரும் ஆதரவால் மட்டுமே சாத்தியமான ஒரு வெற்றி.

இந்த உறவுக்காக உளமார உங்களுக்கு இருகரம் கூப்பி நன்றி தெரிவிப்பதோடு, உங்கள் நம்பிக்கையைத் தொடர்ந்து தக்கவைக்கும் வகையில் செம்மையான பாதையில் பயணிக்கும் என்று உறுதியை எங்கள் சார்பில் உங்களிடம் கூறுகிறோம்.

நமது மின்னிதழில் கவிதை, பண்பாடு, ஆன்மிகம், சமையல், பங்குசந்தை, வணிகம், உணவு, ஜோதிடம், இலக்கியம், வாழ்வியல் என பல்வேறு தலைப்புகளின் கீழ் படைப்புகள் சுருக்கமாக எளிதில் படிக்கும் வகையில் இருப்பது தனி சிறப்பு.

நாம் நகரத்தார் மின்னிதழில் வெளிவரும் செய்திகள், கதைகள், வரலாற்றுத் தகவல்களை பலரும் மற்றவர்களுக்கு வாட்சப்பிலும் ஏனைய சமூக வலைத்தளங்களிலும் பகிர்வது மட்டுமின்றி, வளரும் இன்றைய தலைமுறையினரிடம் செய்திகள் குறித்து விவாதிப்பது, வரலாற்று நிகழ்வுகளையும் எடுத்துக் கூறுவது போன்ற செயல்கள் நம் மின்னிதழை மேலும் செம்மையாக்குவதோடு எங்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருகின்றன.

3ஆம் ஆண்டை தொடங்கும் நம் இதழின் இம்மாத பதிப்பு பல புதிய பகுதிகளுடன் மலர்கிறது.

நாம் நகரத்தார் மின்னிதழ் இந்த இரண்டு வருட காலத்தில் அனைவரது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கேட்டு நமது மின்னிதழில் தேவையான மாற்றங்களை அவ்வவ்போது செய்த வண்ணம் இருக்கின்றோம்.

தற்போது இந்த இதழ் அனைவரும் தங்கள் கைபேசி வாயிலாகவும், இணைய வலைத்தளத்திலும் பதிவிறக்கம் செய்து எளிதில் படிக்கும் வகையில் மின்னிதழாக வடிவமைக்கபட்டுள்ளது. மேலும் நமது மின்னிதழ் வாசகர்கள் வசதிக்காக தங்கள் விருப்ப நேரத்தில் படிக்கும் வகையில் Mobile App ஆக மின்னிதழை விரைவில் வழங்கவிருக்கிறோம். இதன் மூலம் வாசகர்கள் எப்போது வேண்டுமானாலும் படிக்க எதுவாக இருக்கும்.

மூன்றாம் ஆண்டில் தடம் பதிக்கும் இந்த வேளையில் இதழின் தொடக்கம் முதல் எங்கள் முயற்சிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வளர்ச்சிக்கு உதவிகள் செய்து வரும் திரு.உமாபதி அருணாசலம் – இயக்குநர்.ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் பி லிட் பள்ளத்தூர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் புத்தக ஆக்க பணியில் தொடர்ந்து தங்கள் பங்களிப்பை செவ்வனே செய்து வரும் எழுத்தாள நண்பர்களுக்கும், விளம்பரங்கள் அளித்து எங்களது வளர்ச்சியில் உறுதுணையாய் இருக்கும் வணிக நிறுவனங்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளங்களில் மின்னிதழை பகிர்ந்து உதவும் நகரத்தார் சமூக இணைய வலைத்தள குழுக்களின் நிர்வாகிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்.

நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடங்கிய எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம். "இது நமது பத்திரிக்கை, நம் எண்ண வெளிப்பாடு" என்று நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

நமது நாம் நகரத்தார் மின்னிதழ், அனைத்து நகரத்தாரிடமும் சென்றடைய வேண்டும். அதனால், சமூகத்தில் நல்ல பல மாற்றங்கள் நிகழ வேண்டும் என்பதே நம் எங்களின் எண்ணம்

இந்த இதழ் நம் நகரத்தார் சமூகக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை வளர்க்கும் விதமாகவும், படிப்பவர்கள் பல்துறை செய்திகளை படித்து பயனுறும் வகையிலும் தனது பணியினை தொடரும்.

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram




www.maynadiamonds.com
• +91 94426 07043
• +91 94430 42634
GRAND
SALE
SPECIALLLY CRAFTED
MAYNA
DIAMONDS
CUSTOMISED DIAMOND JEWELLERY
www.mayandiamonds.com • 9442607042 • 9443042634
Cassic yet Tendy....



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

மலர் : 3 இதழ் : 1 டிசம்பர் 2023

இலவச வெளியீடு

**பதிப்பாசியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**ஆலோசகர்**

இளமுகில். நாராயணன்

தேவகோட்டை

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---

கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- நெஞ்சினில் வஞ்சத்தை சேர்க்காதே! – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. . . . . . . 15

**வாங்க பேசலாம்**

- செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள் – பேரா.கு.அன்புமெய்யப்பன் இராமசாமி . . . . . . 30

**வாழ்வியல்**

- பெண்கதவு... ஆண்பூட்டு – சேவு.முத்துக்குமார் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 36

**ஆன்மிகம்**

- அருள்மிகு செங்கிடாய்க் கருப்பர் படைப்பு – இராயவரம் . . . . . . . . . . . . . . . . 42

**கவிச்சோலை**

- இழை எடுப்போம் வளம் பெறுவோம் – கவிச்சுடர் தஞ்சை.பழ.வள்ளியப்பன். . . . 52
- நட்பே சிறப்பு – கவிஞர் எம்.சோலை காரைக்குடி . . . . . . . . . . . . . . . . . . . . . . 78
- பெருமைமிகு பிள்ளையார் நோன்பு
  – அரு.சிவகாமி இராமனாதன், ஒக்கூர்– நவிமும்பை. . . . . . . . . . . . . . . . . . . 94
- கணபதியை கை தொழுவோம் – வே.செல்வகணேசன் . . . . . . . . . . . . . . . . . 105

**சிறுகதை**

- சாலி ஆச்சி – இராம.மெய்யம்மை ஆச்சி, காரைக்குடி . . . . . . . . . . . . . . . . . . . 53

**மனிதவளம்**

- தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியில் சுய மதிப்பீடு அவசியமா ? . . . . . 59

**சிறப்புப் பக்கம்**

- நம்பிக்கை தரும் தும்பிக்கையான் நோன்பு ..!!
  –இராம.நா. இராமநாதன் – ஆ.தெக்கூர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 65

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA . . . . . . . . . . 80

**சமையல்**

- பிள்ளையார் நோன்பு பலகாரங்கள். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 81

**உணவே மருந்து**

- அறுகம் புல் = ஆரோக்கியம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 87

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்... க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ . . . . . . . . . . . 95

**ஜோதிடம்**

- கேது பகவான் தரும் ராஜ யோகம்! –ஜோதிடர் எல்லி . . . . . . . . . . . . . . . . . . 106

# வாழ்த்துச் செய்தி



இராம.வயிரவன்
தலைவர்
மதுரை நகரத்தார் சங்கம்

நகரத்தார் பெருமக்களுக்கு வணக்கம்.

நமது "நாம் நகரத்தார் மின்னிதழ்" 2023 டிசம்பர் மாதம்10ம் தேதி மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி.

நாம் நகரத்தார் மின்னிதழ் சிறந்த வாசிப்பிற்கு ஒரு பொக்கிஷமாக இருக்கிறது. ஆன்மீகம், கவிச்சோலை, மனிதவளம், பக்தித்தொடர், நம் திருமண பண்பாடு, உணவே மருந்து, நிதி மேலாண்மை என மின்னிதழின் ஒவ்வொரு பகுதியும் பயனனுள்ளதாக இருக்கிறது. இந்த இதழ் நம்மவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம்.

இம் மின்னிதழை திறம்பட நடத்தி வரும் நச்சாந்துபட்டியை சேர்ந்த திரு இராம.சொக்கலிங்கம், அவரது துணைவியார் திருமதி. உமையாள் @ உமாராணி மற்றும் இதழ் ஆக்கபணியில் உள்ள அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துகள்.

நாம் நகரத்தார் மின்னிதழ் மென்மேலும் வளர்ந்து வர மதுரை நகரத்தார் சங்கம் சார்பில் வாழ்த்துகிறோம்.

# முழுநிலவாய்த் திகழ்கிறது!

–கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா

வண்ணத்தில் மின்னுகின்ற எத்தனையோ இதழுண்டு!
வடிவத்தில் தன்னழகை காட்டுகின்ற இதழுண்டு!
எண்ணத்தை விதைப்பதிலே இதழ்களிலே பஞ்சமுண்டு!
எல்லோரையும் கவர்ந்திடுமே நாம்நகரத்தார் இதழ்ஒன்று!

சொக்கலிங்கம் சுறுசுறுப்பை என்னாளும் வியக்கின்றேன்!
சொந்தமென நண்பர்களை கொண்டாடும் மனிதரிவர்!
எக்கணமும் இதழ்குறித்தே பேசிடுவார் சொக்கலிங்கம்!
தக்கவரைத் தேர்வுசெய்து கட்டுரைகள் எழுதவைப்பார்!



இளைஞர்கள் அறிந்திடவே தொழில்நுட்பம் உதவிடவே
வலைத்தளத்தின் வழியாக மின்னிதழாய் வெளியிட்டார்
புதுமுயற்சி தனைஎடுத்து பொலிவுடனே இதழ்தன்னை
விதவிதமாய் வெளியிட்டு வெற்றிபெற்றார் ஆசிரியர்!

இரண்டாண்டு நிறைவுற்று இறையருளால் தொடர்கிறது!
மூன்றாண்டு தொடக்கத்தில் முழுநிலவாய்த் திகழ்கிறது!
என்றென்றும் நகரத்தார் போற்றிடவே மலர்ந்தஇதழ்
இருபத்து ஐந்தாம்இதழாக இன்றுஇங்கே மலர்கிறது!

நலம்பயக்கும் இதழ்தன்னை நாடெல்லாம் வாழ்கின்ற
குலம்போற்றும் நகரத்தார் வரவேற்று வாசித்தார்!
நாளெல்லாம் வளர்ந்திடுமே நாம் நகரத்தார் இதழ்இங்கே!
தாள்எல்லாம் நற்கருத்தை நெஞ்சத்தில் பதித்திடுமே!

தொண்டென நாளுமவர் தொடர்கின்ற வேள்விக்கு
என்றென்றும் துணையாக இருப்பதுதான் சிறப்பாகும்!
விளம்பரங்கள் இதழினிவே வருவதற்கு வழிசெய்வோம்!
நலம்பயக்கும் நாம்நகரத்தார் நற்தொண்டு தொடரட்டும்!

பத்திரிக்கைத் துறையினிலே தடம்பதித்தோர் நகரத்தார்!
நித்தமொரு தமிழ்நூல்கள் வெளிவரவே பதித்தவர்கள்!
வித்தகராம் சொக்கலிங்கம் இத்துறையில் வெற்றிபெற
சித்திவிநாயகன் அருள்புரிய செல்லப்பா வாழ்த்துகிறேன்!

# அகம் நிறை வாழ்த்து..!!!

நாமெல்லால் நகரத்தார் மேன்மை மிக்கார்!
நல்லபடி பிறர்வாழ வாழும் தக்கார் !
ஆமென்றே  நேர்நிலை சிந்தனை உடையார் !
அளப்பரிய காரியத்தைச் செய்யும் செயலார் !
தாமாக முன்வந்து உதவும் குணத்தார்!
தாராள மனமும் என்றும் மிக்கார்!
சேமமுற நம்பெருமை பறைசாற்றும் மின்னிதழ் ;
செழித்தோங்கி மூன்றாம் ஆண்டும் ஆனதிங்கே ;



மின்னுகின்ற நம்உயர்வு மின்னிதழ் வழியாக;
மற்றோர்கள் அறிந்திட வந்த தருமை ;
தன்னிகர்  இல்லா தருமம் தழைக்க;
தக்கவர் இவரென ஆண்டவன் தந்தகுலம்;
என்றும் புவியில் நிலைப்பது போன்றே ;
எழிலிதழ் நாம் நகரத்தார்  சிறப்புறுக ;
அன்றும் இன்றும் என்றுமுள குறள்போல்
அரும்பிதழ் செழிக்க அகம் நிறை   வாழ்த்து...

கவிஞர் மெ.செயம்கொண்டான்
நிறுவனத் தலைவர்,
வள்ளுவர் பேரவை,
காரைக்குடி.
அலைபேசி : 9865455036

# நகரத்தார் நலம் தழைக்க
## நல்லதொரு மின்னிதழ்!

கவிதாயினி.தேன்மொழி
இராஜமாணிக்கம்
கண்டரமாணிக்கம்

ஈராண்டுகள் இனிதே நிறைவுற்று!
மூன்றாமாண்டில் முனைப்போடு
தடம் பதிக்கும், சமூக இணையதள இதழ்!

வண்ணப் படத்துடன் எண்ணத்தை
நிறைக்கும் ஏற்றமிகு கருத்துக்கள்!

நாம் நகரத்தார் என மார் தட்டிச் சொல்லும்!
நல்லதொரு நிகழ்வுகளை நாளும்
இளைய தலைமுறைக்கு எடுத்துரைக்கும்!
எண்ணற்ற செய்திகள்!



முகம் தெரியா முகவரி அறியா நபரின்
அரிய செயலை வானளாவ
வலை தளத்தில்
எட்டுத் திக்கும் அறிய வைக்கும் விதம்!அற்புதம்!

சிறுவர் முதல் பெரியோர் வரை
பயனடையும் கருத்துக்கள் நிறைந்த கருவூலம்!
செவி வழியாகச் சென்று
இதயத்தைத் தைக்கும் இனிய நூலகம்!

அறிவுக்கு விருந்தளிக்கும் ஊடகம்!
மறைந்து போன மறந்து போன
ஆற்றலை வெளிக் கொணரும் ஆலயம்!

இல்லத்திலிருந்தே அகிலத்தில் நடக்கும்
அளப்பரிய நிகழ்ச்சிகளை உடனுக்குடன்
அறிந்து கொள்ள அளவற்ற செய்திகளை
அள்ளித் தரும் அட்சய பாத்திரம்!

உலக நகரத்தார்கள் இணைய வழி செய்த சரணாலயம்!
இனி வருமாண்டில் இன்னும் மேலாய்
இனியன செய்து இனிதே தொடர்ந்து
வெற்றி நடை போட வாழ்த்துகிறேன் ..!!!


PALLATHUR MOTORS LLP
SWITCH TO THE FUTURE
LECTRIX
FUEL? THINK ELECTRIC
Rising fuel prices are draining your hard-earned money
Switch to Lectrix
+91 80157 73735
ELECTRIFY YOUR JOURNEY NOW
Go far and wide with just a single charge
Book Your TEST DR!VE Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# நெஞ்சினில் வஞ்சத்தை சேர்க்காதே!

– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

மனிதர்களுக்கு அறிவுரை வழங்குவதற்காக ஔவையார் எழுதியது "ஆத்திச்சூடி"யாகும்.

இதை நாம் குழந்தைகளுக்கு அவசியம் சொல்லிக்கொடுக்க வேண்டும். இதிலுள்ள கருத்துக்கள் அத்தனையும் மனிதன் மனிதனாக வாழ்வதற்குச்சொன்ன வழிமுறைகள் ஆகும். இதனை குழந்தைகள் மட்டுமல்லாமல் அனைவரும் படித்து, அந்தக் கருத்துக்களை மனதுக்குள் வைத்திட வேண்டும்.



இதில் ஔவையார் "வஞ்சகம் பேசேல்" என்கின்றார். இதற்கு என்ன பொருள் என்றால், தன்னுடைய நலத்தை மட்டுமே நினைத்து, முற்றிலும் உண்மைக்கு மாறான சொற்களையும், கவர்ச்சிகரமான சொற்களையும்,வஞ்சக உணர்வோடு,பேச்சிலே கலந்து,தன் எதிரே நிற்பவரின் மனதைக்கலங்கச்செய்யும் வகையில் பேசாதே! என்கின்றார் ஔவையார். இப்படிப்பட்ட வஞ்சகம் மிகுந்த பேச்சுக்கள் உனது மதிப்பை மங்கச்செய்யும் என்கிறார்.

இன்றைக்கு நமது குழந்தைகளுக்கு,ஔவையின் "வஞ்சகம் பேசேல்" என்ற வரியை படிக்கவைத்து, அதற்கான பொருளைச் சொல்லிக் கொடுத்து, எப்படி பிறரோடு பேச வேண்டும் என்பதைச் சொல்லி வளர்க்க வேண்டும்.

சின்னப்பிள்ளைகளுக்கு, நாம் அடிக்கடி சொல்லிக்கொடுப்பது இதுதான், "பொய் சொல்லக் கூடாது, உண்மையைத்தான் பேச வேண்டும்"என்று சொல்வோம்.

உண்மை,பொய் ஆகிய இரண்டையும் விடக் கொடூருமானது "நயவஞ்சகம்" என்பது. இந்தக்குணத்தைக் கொண்ட மனிதர்களை நாம் கண்டு உணர்வது என்பது கடினமானது.

வஞ்சகச் சொற்களை உதிர்க்கும் மனிதர்களை குழந்தைகள் எப்படி அறிந்து கொள்வது? என்பதை பெற்றோர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். சிறு குழந்தைகள் தாங்கள் காணும் அனைவரையுமே நல்லவர்கள் என்று எண்ணும் குணம் கொண்டவர்கள்.



ஏன்என்றால் இந்த உலகில் வாழும் மனிதர்களில் பல வகையினர் உண்டு. மகான்கள், துறவிகள்,தீய எண்ணம் கொண்டவர்கள், நற்பண்புகளுக்குச் சொந்தக்காரர்களாக விளங்கும் நல்லவர்கள், எதையும் நம்மிடம் எதிர்பார்க்காமல் உதவும் நண்பர்கள், எதையோ நம்மிடம் எதிர்பார்த்து உதவும் நண்பர்கள், நம்மை அழிக்க நினைக்கும்

கயவர்கள், நம்மை ஒதுக்கத்துடிக்கும் சிறுமதியினர், பொறாமை கொண்ட உறவினர்கள், குடிகாரர்கள்,காமுகர்கள், குண்டர்கள், அயோக்கியர்கள், ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டு திரிபவர்கள், சண்டியர்கள், ஆகியோர் களுக்கு நடுவில்தான் நாம் வாழ்கிறோம் என்பதை முதலில் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

இந்த உலகில் நமது வாழ்க்கை என்பது இப்படிப்பட்டவர்களுடன் வாழ்வதற்காகவே இறைவனால் பிணைக்கப்பட்டு உள்ளது. நல்லவர்களோடு நம் வாழ்க்கை இந்த உலகில் அமைந்திருந்தால் எவ்வளவு நாம் மகிழ்ந்திருப்போம்? நமது வாழ்வு எவ்வளவு சுகமாக இருந்திருக்கும்?

நாம் காட்டிற்குள்ளே சென்றால், எதிரிலே தென்படும் மிருகங்களில் எது யானை? எது சிங்கம்? எது புலி? எது மான்? என்று அவைகளின் தோற்றத்தை வைத்து,அதனது இயல்பைத்தெரிந்து சொல்லி விடுவோம்.

உலகில் நம் கண் முன்னே உலவுகின்ற மனிதர்களைப் பார்த்து, அவன் நல்லவனா? கெட்டவனா? என்பதை நம்மாலே எப்படி உணர்ந்து கொள்ள முடியும்?.



மனிதர்களில் சிலர் நம்மைச் சிரிக்க வைப்பார்கள். சிலர் நம்மைச் சிந்திக்க வைப்பார்கள்.சிலர் நம்மைக் கண்ணீர் சிந்த வைப்பார்கள்.

சிலர் நம்மைத்தூற்றுவார்கள். சிலர் நம்மை ஏமாற்றுவார்கள். சிலர் நம்மை புகழ்வது போல புகழ்ந்து ஏசுவார்கள்.

இத்தகையோரால் நம்மை கண்கலங்க வைக்க முடியுமே தவிர, நமது கண்ணீரைத் துடைக்க, அவர்கள் முன்வர மாட்டார்கள்.

இதனை நன்கு அறிந்த வடலூர் வள்ளல் பெருமான் பின்வருமாறு பாடினார்.

"உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்றார்.

ஆம் வாயொன்று பேசும், மனம் ஒன்று நினைக்கின்ற மனிதர்கள் வாழும் உலகத்தில்,உள்ளும்,புறமும் வேறு வேறாகத்திரிகின்ற வஞ்சர்கள், நாம் விரும்பாமலேயே அவர்களாக நம்மோடு வந்து கலந்து விடுவார்கள்.



அது நாம் விரும்பி ஏற்றுக்கொண்டதும் இல்லை அதற்காக நாம் அவர்களைத் தேடிப்போனதும் இல்லை.இது நம்மை அறியாமல் நடந்துவிட்ட ஒன்று. எனவே தான் வள்ளலார், இது போன்ற மனிதர்களின் உறவு கலவாமை வேண்டும் என்று இறைவனிடத்திலே வேண்டுகிறார்.

'தீ' என்று சொன்னாலே நாம் அலறுவோம். காரணம் தீயின் வெட்பத்தை பற்றி அறிந்துள்ளோம். அதனைத் தொட்டுப்பார்த்து, தீ என்பது சுடும் என்று உணர்ந்துள்ளோம்.

அதே தீயினைக் கொண்டு அடுப்பை ஏற்றுகிறோம். அதன் பயனால் சமையல் செய்கிறோம். அதே தீயினைக்கொண்டு விளக்கினை ஏற்றுகிறோம். அதனால் நாம் இருட்டை நீக்கி வெளிச்சத்தைப் பெறுகிறோம். கொடிய விலங்குகளைக்கூட பயிற்சி அளித்து, பல விதமான வேலைகளைச்செய்திட வைக்கிறோம். மின்சாரத்தின் அபாயத்தை உணர்ந்து,அதைப் பயன்படுத்துவதில் மிகுந்த எச்சரிக்கையோடு ஈடுபடுகிறோம்.

உயிர் அற்றவைகளோடு நாம் மிகவும் கவனத்தோடும், எச்சரிக்கை –யோடும் பழகுகின்ற நமக்கு,உயிர் பெற்ற மனிதனோடு பழகுவதிலே நாம் திண்டாடுகிறோம்.ஏன் இந்தத் தடுமாற்றம்? மனிதன் உணர்ச்சிகளின் மொத்த உருவம். அவனது இயல்பையும், குணத்தையும் நம்மாலே அறிய முடியவில்லை. பசுத்தோல் போர்த்திய புலியாகத்தான்,உலகினில் ஒவ்வொருவரும் காட்சி தருகிறார்கள்.



நம்மைப்போல அவர்கள் இருப்பார்கள் என்று நினைக்கிறோம். நமது இயல்புக்கு ஏற்ப அவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோம். நமது எண்ணத்தோடு அவர்கள் ஒத்துப்போவார்கள் என்றும் நினைக்கிறோம். ஆனால் நமது நினைப்பிற்கு எதிராக அவர்களது நடைமுறைகள் திகழ்கின்ற போதுதான் நாம் அவர்களை முழுமையாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

அதுவரை அவர்களது நய வஞ்சகத்தை நாம் அறியோம். வனவாசம் சென்றால் கூட நாம் தப்பித்து உயிர் பிழைத்து விடுவோம். இந்த ஜனவாசத்தில் நாம் மாட்டிக் கொண்டால்,தப்பிக்கவும் முடியாது, உயிர் பிழைக்கவும் முடியாது. காரணம் வாளைவிடக் கொடிய ஆயுதுமான வார்த்தைகளால் நம்மைச் சாய்த்து விடுவார்கள்.

அதுவரை அவர்களது நய வஞ்சகத்தை நாம் அறியோம். வனவாசம் சென்றால் கூட நாம் தப்பித்து உயிர் பிழைத்து விடுவோம். இந்த ஜனவாசத்தில் நாம் மாட்டிக் கொண்டால்,தப்பிக்கவும் முடியாது, உயிர் பிழைக்கவும் முடியாது. காரணம் வாளைவிடக் கொடிய ஆயுதுமான வார்த்தைகளால் நம்மைச் சாய்த்து விடுவார்கள்.

இப்படிப்பட்ட மனிதர்களை தவிர்த்துவிட்டு வாழ்ந்துவிட நம்மாலே முடியாது. விதியின் வழிப்படி நாம் இவர்களை ஒதுக்கிவிட்டு வாழ முடியாது. அவர்களின் குறை நிறைகளை அறிந்து சகித்துக்கொண்டு தான் வாழ வேண்டும்.

ஒரு ஞானியிடம் சீடன் ஒருவன் எல்லாக்கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். அந்த ஞானியின் மற்ற சீடர்கள் எல்லாம் ஞானியை வெறுத்தார்கள். நீங்கள் ஞானியை வெறுப்பதற்கு என்ன காரணம்? என்று கேட்டதற்கு, அவர்கள் சொன்ன பதில்,"ஞானி நானே இறைவன்" என்கிறார். அதனால் நாங்கள் வெறுக்கிறோம் என்றனர்.

மறுநாள் அந்த ஞானியை நோக்கி மற்ற சீடர்கள் கற்களை தூக்கி வீசினர். ஞானி அந்தக்கற்களை சிரித்தபடி ஏற்றுக்கொண்டார். ஞானியிடம் கற்று அறிந்த சீடன் தனித்து நின்று கொண்டிருந்தான். மற்ற சீடர்கள் அவனைப்பார்த்து, ஞானியை நீ ஆதரிக்கிறாயா? எனக்கேட்டனர். "ஆமாம்" என்று பதில் சொல்லத்தயங்கி, அவர்களை எதிர்த்துக்கொள்ள அஞ்சி,தானும் கல்லைத்தூக்கி அடிப்பதுபோல, பூக்களைப் பிடுங்கி ஞானிமீது எறிந்தான் சீடன். அதனைப்பார்த்த ஞானி அழுதுகொண்டே அந்தப் பூக்களை தள்ளிவிட்டார்.

சீடன் ஞானியிடம் போய், குருவே கல்லால் அடித்தபோது சிரித்துக் கொண்டே ஏற்ற நீங்கள், நான் பூக்களால் அடித்த போது ஏன் அழுதீர்கள்? என்று கேட்டான்.

அதற்கு ஞானி சொன்னார், மற்றவர்கள் அறிவற்றவர்கள். என் மீது வஞ்சக எண்ணம் கொண்டவர்கள். இதுநாள் வரை அவர்கள் நான் கூறியவற்றை பின்பற்றாதவர்கள்.எனவே அறியாமையால் அவர்கள் கற்களை என் மீது எறிந்த பொழுது,அதற்காக நான் சிறிதும் வருந்த வில்லை மாறாக சிரித்துக்கொண்டே அந்தக்கற்களைத்தாங்கிக் கொண்டேன்.



நீயோ என்னிடம் அனைத்தையும் முறையாக கற்றுத்தேர்ந்தவன். என்னுடன் எப்பொழுதும் இருந்தவன். ஆனால் உண்மை நிலை தெரியாமல், அந்த அறிவற்ற அரக்கர்களோடு சேர்ந்து கொண்டு, நீ பூக்களை என் மீது எறிந்தாயே, உனது நிலையை அறிந்து நான் வேதனைப்பட்டு அழுதேன் என்றார். எனவே நீ மனிதர்களின் குணத்தை நன்கு அறிந்து கொள்ள முயல வேண்டும் என்றார்.

ஆம் நண்பர்களே, நல்லவர்கள் போல நம்முன்னே நடிப்பார்கள் சிலர். அவர்களின் நாடகத்தை உண்மை என்று கருதிப்பழகி விடாதீர்கள். சிலர் நம்முடனே பலநாட்கள் நமக்கு அரணாக இருப்பார்கள்.

நாமும் அவர்களை நம்பி பலவற்றை ஒப்படைத்து இருப்போம். சரியான காலம் வரும் வரை காத்திருந்து,உடனிருந்து நம்மை ஒழித்து விட்டு, தங்களை வளப்படுத்திக் கொள்வார்கள்.

எப்படி கொக்கு ஒன்று, ஆற்றங்கரையில் நின்று கொண்டு, தனது உணவுக்கு ஏற்ற மீன் வரும் வரை காத்திருந்து கொத்துமோ, அது போல மனிதர்கள் பலரிடம் நயவஞ்சகம் என்னும் குணம் நிறைந்திருக்கும்.




எனவே நாம் வாழ்கின்ற காலம்வரை நம் நெஞ்சினில் நயவஞ்சகத்தை விதைக்காமல் வாழப்பழகுவோம். முடிந்தவரை மற்றவர்களையும் நயவஞ்சகம் பேசாமல் வாழக்கற்றுக் கொடுப்போம்.

மனிதர்களின் குணத்தில் மாற்றமே ஏற்படாது என்று எண்ண வேண்டாம். மனிதர் களிடம் சில மாற்றங்கள் உடனடியாக ஏற்படாது. காலமும் சூழ்நிலையும் மாறும்பொழுது, ஒவ்வொரு மனிதனின் மனதிலும் நயவஞ்சகம் குடிகொள்ளாது என்று நம்புவோம்.

குரங்கின் கையில் கொல்லியைக்கொடுத்து,அதை கூரை மீது ஏற்றிவிட்டால், அது என்ன செய்யும்? எல்லோருக்கும் வெளிச்சம் கிடைக்கட்டும் என்றா நினைக்கும்? குரங்கு அந்தக்கூரையை தீயிட்டு கொளுத்திவிடும்.

வஞ்சகர்கள் சிலரை நம்மோடு வைத்திருந்தால் அவர்கள் என்ன நம்மை மகிழ்ச்சியோடு வாழ விடுவார்களா? இல்லை இல்லை நம்மை என்றைக்கு அழிக்க முடியும் என்று தானே நினைத்துக் கொண்டிருப் பார்கள்.




எனவே ஔவை சொன்னது போல வஞ்சகம் பேசாமல் வாழ்வோம். வஞ்சகம் கொண்டோரை தவிர்ப்போம்.



கட்டுரை ஆசிரியர்
தொடர்புக்கு: 9791033913,
aamchennai@gmail.com

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்; உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்! (ஆனால் முயற்சி தேவை)

– சுவாமி விவேகானந்தர்

உ

VALATHI
Since 2005

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி)லிட்.

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ.1,00,000/- முதல்**

**ரூ.25,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பதினேழு (17) ஆண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை.**

0431-2760064,80
3580292,7968005.

துவக்கம்
2005

94439 86143

## TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-95, மூர்த்தி ஸ்கொயர், முதல் தளம்,
5வது கி ரா ஸ் தில்லைநகர் மெயின் ரோடு,
MPM ஸ்டோர்ஸ் மாடியில் திருச்சி - 620 018.
Cell : 94439 86143

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி,
(ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ சத்தியமேவ ஜெயதே ★

# காரைக்குடி நகரத்தார் சங்கம், சென்னை KNSC
# நடத்தும்
# காரைக்குடி சந்தை
## 24.12.2023

காரைக்குடி நகரத்தார் சங்கம் சென்னை (KNSC) 2015ல் துவக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மகளிர் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் நல்ல நோக்கத்துடன் இந்நகரத்தார் சங்கம் இந்த காரைக்குடி சந்தையை மூன்றாம் முறையாக ஏற்பாடு செய்துள்ளது. இதற்குமுன், 29.12.2019 சென்னை மகாலிங்கபுரத்தில் எம்.எல்.எம் மண்டபத்திலும், 18.12.2022 எழும்பூர் ராணி மெய்யம்மை ஹாலிலும் காரைக்குடி சந்தையை (KNSC) உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக திறம்பட நடத்தினார்கள். மக்கள் அலைகடலென திரண்டு வந்து சந்தைக்கு மெருகூட்டினார்கள். இம்முறை 24.12.2023, ஞாயிற்றுகிழமை, ராணி மெய்யம்மை ஹாலில் இன்னும் பிரம்மாண்டமாக நடத்த உள்ளனர்.




புது ஸ்டார்ட் அப் தொழில் துவங்க நினைக்கும் இளைய தலைமுறை பெண்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ள நம் நகரத்தார் பெண் தொழில்முனைவோர் நம் நாட்டின் பொருளாதாரத்தில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளனர்.

நகரத்தார் ஆண்களும் தொடர்ந்து பெண்களை மேம்படுத்துவதிலும், தொழில் முனைவோரை ஊக்குவிப்பதிலும் முக்கிய பங்காற்றியுள்ளனர். வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்துடனும் செயல்பட்டால் சாதிக்கலாம் என்பதற்கு நம் நகரத்தார் பெண்கள் ஒரு உதாரணம். காரைக்குடி சந்தைக்கு Co–sponsor ஆக தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஆதரவு தருகிறது செட்டிநாடு குழுமம். நகரத்தார் சங்கத்திற்கும், நமது சமூகத்திற்கும், காரைக்குடி சந்தைக்கும் செட்டிநாடு குழுமத்தின் பேராதரவு பலம் சேர்த்து வருகிறது. நினைப்பதை எண்ணங்களாக்கி, எண்ணங்களை உணர்வுகளாக்கி, உணர்வுகளை வலுவாக்கி, வலிமையை அற்புதமாக்கி, அற்புதங்களை அடையாளமாக்கிய டாக்டர் எம்.ஏ.எம்.ஆர். முத்தையா அவர்களுக்கும் திருமதி கீதா முத்தையா அவர்களுக்கும் காரைக்குடி நகரத்தார் சங்கத்தின் சார்பாக நன்றிகள் பல.



கிராமப்புற பெண்களின் மேம்பாட்டிற்கு உறுதுணையாக 2 M.Rm.Rm.Cultural Foundation. ச ⌀ggi பெண் தொழில் முனைவோரின் நிர்வாகத் திறமையையும், வியாபார யுக்தியையும் மேம்படுத்தி பல உதவிகளையும் ஊக்கத்தையும் தொடர்ந்து தந்து உறுதுணையாக உள்ள திருமதி விசாலாட்சி ராமசாமி ஆச்சிக்கு மனமார்ந்த நன்றிகள்.

காரைக்குடி சந்தையை விருட்சமாக்கிய வேர்கள் & Associate sponsors. M.Rm.Rm. Cultural Foundation, Rathna Residency, Lakshmi Ceramics மற்றும் Kaaveri coffee இந்த வருடமும் தொடர்ந்து ஆதரவு தந்து எங்களுடன் கைகோர்ப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

• அன்பு என்னும் மரத்திற்கு. • ஆணி வேறாக இருந்து. • இல்லறத்தை செவ்வனே நடத்தி • ஈன்ற சேயை வளர்த்து • உழைப்பை மூலதனமாக்கி • ஊக்கத்தை தளரவிடாது • எக்காலத்திலும் நேர்மை தவறாது • ஏராளமான திறமை கொண்டு • ஐம்புலன்களை அடக்கி ஆண்டு • ஒளியாய் பிரகாசித்து • ஓய்வின்றி உழைத்து • ஔவியம் பேசாது

பெண் தொழில் முனைவோரை முன்னிறுத்தும் காரைக்குடி நகரத்தார் சங்கம் நடத்தும் காரைக்குடி சந்தைக்கு வாருங்கள்! நகரத்தார் புகழ் சிறக்க, காண்போரின் மனம் மகிழ, பொருட்களால் உங்கள் இல்லம் நிறைய, இதோ சென்னையில் நடக்கும் காரைக்குடி சந்தைக்கு குடும்பத்துடன் குதூகலமாய், குழந்தைகளுடன் உற்சாகமாய், புன்னகையுடன் படைசூழ வாருங்கள்.



முனைப்போடு முத்தாய்ப்பாய் வருகிறோம்!!!
புத்தாண்டு பிறக்கும் வேளையிலே புது பொலிவுடன் வருகிறோம்!!!
சொந்த பந்தம் அக்கம் பக்கம் அழைத்து வாரீர்!!!
காரைக்குடி சந்தைக்கு ஆதரவு தாரீர்.!!!

– சிகப்பி ராமசாமி

Co-Sponsor
Chettinad Sarvalokaa Education International School
M.Rm.Rm Cultural Foundation
Associate Sponsors
Rathna Residency
Lakshmi Ceraamics
KAAVERI "Everything you love about coffee"
Advt Sponsor
indigo woods





உ
சிவமயம்
வேலும் மயிலும் துணை






# நெற்குப்பை
# சோபகிருது, 2024 ஆம் ஆண்டு
# 424 ஆம் வருட கட்டளைக்காவடியும், வேலும்
# பழநி தைப் பூசபாதயாத்திரை அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 1 | சோபகிருது வருடம் தை மாதம் 6-ஆம் தேதி 20-01-2024 சனிக்கிழமை | காலை | நெற்குப்பை பழநிக் கோவில் வீட்டில் 7.35 மணிக்கு கட்டளை காவடி முறைகாரர் பொங்கல் வைத்தல் |
| | | | பழநிக் கோவில் வீட்டில் 7.35 மணிக்கு காவடி கட்ட ஆரம்பித்தல் |
| | | பகல் | 10.35 மணிக்கு வேல் அபிஷேக ஆராதனை |
| | | இரவு | 7.00 மணிக்கு காவடிகளும் வேலும் நகர்வலம் வந்து புதுஊரணிக் கரையில் திருநீறு கொடுத்து புறப்படுதல் |
| 2 | தை மாதம் 7-ஆம் தேதி 21-01-2024 ஞாயிற்றுக்கிழமை | காலை | அதிகாலை தெக்கூர் விநாயகர் கோவிலில் கட்டளைக் காவடிக்கு அவல், பொரி நைவேத்தியம் பானக பூஜை - புறப்படுதல் |
| | | பகல் | சமுத்திராபட்டி - பூஜை - அன்னதானம் |
| | | இரவு | கட்டளைக் காவடிக்கு அவல், பொரி நைவேத்தியம் பானக பூஜை - புறப்படுதல் |
| 3 | தை மாதம் 8-ஆம் தேதி 22-01-2024 திங்கட்கிழமை | பகல் | கொசவபட்டி - பூஜை - அன்னதானம் |
| | | இரவு | திண்டுக்கல் நகரத்தார் சங்கத்தில் தங்குதல் கட்டளைக் காவடிக்கு அவல், பொரி நைவேத்தியம் பானக பூஜை - புறப்படுதல் |
| 4 | தை மாதம் 9-ஆம் தேதி 23-01-2024 செவ்வாய்கிழமை | பகல் | செம்மடைப்பட்டி - பூஜை - அன்னதானம் |
| | | இரவு | குழந்தை வேலன் சன்னதி - கட்டளைக் காவடிக்கு அவல், பொரி நைவேத்தியம் பானக பூஜை - புறப்படுதல் |
| 5 | தை மாதம் 10-ஆம் தேதி 24-01-2024 புதன்கிழமை | காலை | பழநி - கடுக்காய் பாறை அடைதல் |
| | | பகல் | பழநி அன்னதான மடத்தில் - முதல் நாள் பூஜை - நெற்குப்பை பூசாரி ஐயா கலந்து கொண்டு நடைபெறும் அன்னதானம் |
| | | இரவு | பழநி இடும்பன் மலை அடிவாரத்தில் அனைத்து ஊர் காவடிகளுக்கும் நெற்குப்பை பூசாரி ஐயாவும், அருளாடி ஐயாவும் கலந்து கொண்டு பூஜை - நகர்வலம் வந்து அன்னதான மடம் அடைதல் - பானக பூஜை |
| 6 | தை மாதம் 11-ஆம் தேதி 25-01-2024 வியாழக்கிழமை | பகல் | அன்னதான மடத்தில் இரண்டாம் நாள் பூஜை |
| | | இரவு | அன்னதான மடத்தில் பானக பூஜை |
| 7 | தை மாதம் 12-ஆம் தேதி 26-01-2024 வெள்ளிக்கிழமை | பகல் | அன்னதான மடத்தில் மூன்றாம் நாள் பூஜை |
| | | இரவு | அன்னதான மடத்தில் பானக பூஜை |
| 8 | தை மாதம் 13-ஆம் தேதி 27-01-2024 சனிக்கிழமை | காலை | சண்முக நதியில் தீர்த்தம் ஆடி ஆறுமுக விநாயகருக்கு பொங்கல் வைத்து பூஜை செய்தல். |
| | | பகல் | அன்னதான மடத்தில் நான்காம் நாள் பூஜை. கட்டளைக் காவடி மற்றும் அனைத்து ஊர்க் காவடிகளுக்கும் தீபம் பார்த்து காவடி செலுத்த புறப்படுதல். |
| 9 | தை மாதம் 14-ஆம் தேதி 28-01-2024 ஞாயிற்றுக்கிழமை | காலை | வருத்தாறு தீர்த்தம் |
| | | பகல் | அன்னதான மடத்தில் ஐந்தாம் நாள் பூஜை - அன்னதானம் |
| | | இரவு | பழநி - மாரியம்மன் கோவிலில் நெற்குப்பையார் மண்டகப்படி. |
| 10 | தை மாதம் 15-ஆம் தேதி 29-01-2024 திங்கட்கிழமை | காலை | பழநி மலையில் நெற்குப்பையார் பஞ்சாமிர்த அபிஷேகம் |
| | | பகல் | அன்னதான மடத்தில் அடுப்படி பூஜை - அன்னதானம் |
| 11 | தை மாதம் 16-ஆம் தேதி 30-01-2024 செவ்வாய்கிழமை | பகல் | பழநி மலையில் நகரத்தார்கள் சந்தன அபிஷேகம் - மலையில் பூசாரி, சந்தன ஐயாவிடமும், அருளாடியாரிடமும் திருநீறு, சந்தனம், பாகற்காய் சோறு பெற்றுக்கொண்டு விடைபெறுதல். |
| 12 | தை மாதம் 17-ஆம் தேதி 31-01-2024 புதன்கிழமை | காலை | 8.00 மணிக்கு வேல் காவடிகள் வண்டிகள் புறப்படுதல். |
| 13 | தை மாதம் 18-ஆம் தேதி 01-02-2024 வியாழக்கிழமை | இரவு | திண்டுக்கல் - பூஜை - தங்குதல் |
| 14 | தை மாதம் 19-ஆம் தேதி 02-02-2024 வெள்ளிக்கிழமை | மாலை | சமுத்திராப்பட்டி - பூஜை |
| | | இரவு | சமுத்திராப்பட்டியில் பானக பூஜை திருநீறு, சந்தனம் பெற்றுக்கொண்டு அவரவர் ஊர்களுக்கு புறப்படுதல் |
| 15 | தை மாதம் 20-ஆம் தேதி 03-02-2024 சனிக்கிழமை | பகல் | 12.30 மணிக்கு நெற்குப்பை செட்டி ஊரணி பிள்ளையார் கோவிலில் வேலுக்கு அபிஷேகம் செய்து, காவடிகளுக்கு தீபம் பார்த்து திருநீறு, சந்தனம் பெற்றுக்கொண்டு கோவில் வீடுக்குச் சென்று தீபம் பார்த்து பழநி பயணம் நிறைவுறுதல். |

பஞ்சாமிர்தம் பெற்றுக் கொள்ளுதல் - பயண நிறைவு.

# கருடவேகா

# GARUDAVEGA®

*connecting emotions...Globally*

**A Brand of NexGen Logistics Pvt. Ltd**

International Courier Services

www.garudavega.com

**Cell : 77999 40038**
**95001 49514**

WE PROVIDE THE FASTEST DELIVERY SERVICE TO ANYWHERE IN THE WORLD

WE DELIVER IN 5 BUSINESS DAYS WHEREVER IN THE WORLD

FREE PACKING SERVICE AVAILABLE

WE PROVIDE STANDARD AND NRI-SEALED COVER PACKAGING FREE OF COST

WE ARE HERE TO HELP YOU AND MAKE YOU EASIER

OUR CUSTOMER SUPPORT IS AVAILABLE 24/7

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு
நம் வீட்டு பொருட்களை அனுப்பிவையுங்கள் 5 நாட்களில் அவர்களின்
இல்லத்திற்கே டெலிவரி செய்கிறோம்

- காரைக்குடி மக்களின் நம்பிக்கையை பெற்ற கருடவேகா
- மற்ற வெளிநாட்டு கொரியர்களை விட 60% விலை குறைவு

UP TO 50% TO 60% CHEAPER THAN DHL, FEDEX & UPS

FOOD ITEMS | GARMENTS | GIFT ARTICLES | MEDICINES | ALL EXPORT MATERIALS



## International / Cargo Services

- *More than 200 countries of service*
- *More than 3000 Successful Deliveries from KARAIKUDI to USA*
- *500 Plus Successful Deliveries from Karaikudi to UK*
- *Most Trusted International Service in Karaikudi.*

Contact : **L.VINAITHEERTHAN** M.Tech., Garudavega Karaikudi.
41, Church Second Street, Near Golden Singar Mahal,
New Town, Karaikudi - 630001. Sivaganga Dist, Tamil Nadu
**Cell: 77999 40038, 95001 49514**

# வாங்க பேசலாம்...!

( செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள் )



– பேரா.கு.அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!

செட்டிநாடு என்ற பெயரில் ஒரு நாடோ, மண்டலமோ, கிராமமோ இருந்ததும் இல்லை. இப்போதும் இல்லை. ஆனால் அப்பெயர் எப்படி வந்தது? அதற்கும் ஒரு வரலாறு உண்டு.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தல் மிகப் பெரும் பொருட் செலவில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தை உருவாக்கினார் அண்ணாமலை செட்டியார். இக்கல்வித் தொண்டைப் பாராட்டி, "ராஜா சர்" பட்டத்தை ஆங்கில அரசு 1929–இல் கொடுத்துப் பெருமைப்படுத்தியது.

அக்காலத்தில் தனக்கு இருந்த அரசியல் செல்வாக்கினால், நம் இனத்தார் வாழ்ந்த பகுதியில், அண்ணாமலை செட்டியாரின் ஊரான கானாடுகாத்தானில் ஒரு ரயில் நிலையத்தை அமைக்க ஏற்பாடு செய்துள்ளார். அதன் பொருட்டு ஒரு ரயில் நிலையம் அமைக்கப்பட்டு, அதற்கு "செட்டிநாடு" எனப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அது முதல் நகரத்தார் பெருமக்கள் அதிகமாக வசித்த சிவகங்கை மாவட்டத்தின் குறிப்பிட்ட பகுதிகள் "செட்டிநாடு" என்றழைக்கப்பெற்றுள்ளன.

இந்தியா முழுமைக்கும் எப்படி "தமிழ்நாடு" என்று நம் மாநிலம் குறிக்கப்பெறுகிறதோ, அதுபோல தமிழ்நாட்டிற்குள் குறிப்பிட்ட பகுதி செட்டிநாடு எனக் குறிக்கப்பெறுவது அவ்வினத்தைச் சேர்ந்த நமக்குக் கிடைத்த பெருமையன்றி வேறில்லை.



செட்டிநாடு என்று கூறிக்கொண்டால் மட்டும் போதுமா? நாடென்றால் வள்ளல்கள் இருக்க வேண்டுமே? அதற்கும பஞ்சமில்லை நம் நாட்டில். கல்வி தொடங்கி ஆன்மீகம் வரை பற்பல கொடைகளை இன்றும் விடாது செய்து வருபவர்கள் நகரத்தார்கள்.

பண்பிலும், பழக்க வழக்கத்திலும், பேச்சு வழக்கிலும் பிறரிடமிருந்து எக்காலத்திலும் தனித்துக் காட்சி தருபவர்கள் நகரத்தார்கள். நம் நகரத்தார்கள் இன்றும் புகழோடு விளங்கக் காரணம் நாம் பின்பற்றி வந்த ஒழுக்க நெறிகளும், ஆன்மீகமும், பெரியோருக்குக் கொடுக்கின்ற மரியாதையும், நாணயமும், நேர்மையும் என்றால் அது மிகையல்ல.

நம் ஐயாக்கள் படைப்புகளைத் தொடர்ச்சியாகச் செய்து வந்ததன் நோக்கம், நம் முன்னோர்களைப் பற்றியும் அவர்களது செயல்களைப் பற்றியும் இளைய தலைமுறையினரும், சிறு குழந்தைகளும் அறிந்து கொள்வதற்காகவே. படைக்கப்படும் முன்னோர்களைப் போல் சிறப்போடு வாழ வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கவே. ஆனால், இன்றும் படைப்புகள் ஏராளமாகப் படைக்கப்படுகின்றன. ஆனால், சிறு குழந்தைகளையோ, இளைய தலைமுறையினரையோ அதிகம் காண முடியவில்லை. இதெல்லாம் பெரிய விஷயமா? என்று கேட்பவர்களும் இருக்கக் கூடும்.

ஆனால், இதுதான் தொடக்கம். நகரத்தார் என்ற புகழ் தொடர்ச்சியாக இருக்க வேண்டுமானால், வளரும் தலைமுறையினருக்கு நம் சமூகம் பற்றியும், பழக்க வழக்கங்கள் பற்றியும் எடுத்துரைக்க வேண்டும். இது நகரத்தாராகப் பிறந்த ஒவ்வொருவருக்குமான கடமையாகும்.

அந்த வகையில், நம் குடும்பங்களில் ஐயாக்களும் அப்பத்தாக்களும் அதிகமாகப் பேசிய, நம் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம். வாங்க பேசலாம்..!

### 1.ஆத்தா

அந்த "ஆத்தா" – ஆத்மார்த்தமான சொல். 30 வருடங்களுக்கு முன்பு வரை அனைத்து நகரத்தார் குடும்பங்களிலும் பல லட்சம் முறை உச்சரிக்கப்பட்ட சொல். செட்டிநாட்டுப் பகுதியில் வசித்த அனைத்து ஆண்களும், பெற்ற தாயை, அக்காவை, தங்கையை, மகளை, அக்கா மகள்களை, தங்கை மகள்களை, பேத்திகளை, மருமகள்களை வாய் நிறைய, மனம் நிறைய அன்புடன் அழைத்த சொல்.



மனைவியைத் தவிர மற்ற அனைத்து பெண்களையும் அழைக்கப் பயன்படுத்திய பண்பட்ட சொல்.

ஆத்தா என்று பேச்சு வழக்கில் அழைக்கப்படும் "ஆத்தாள்" என்று சொல்லைப் பிரித்து ஆய்ந்தோமானால், மிகச் சிறந்த தமிழ்ச் சொல் என்பது புலப்படுகிறது. அத்து+ஆள்=அத்தாள். இதுவே பின்னாளில் ஆத்தாள் என மருவி வழங்கி வந்துள்ளது. அத்து என்ற சொல்லுக்கு அன்பு, நெருக்கம், பற்று, பரிவு என்பவை பொருளாகின்றன. அந்த வகையில் அன்பு நிறைந்த, நெருக்கம் நிறைந்த, பற்று நிறைந்த, பரிவு நிறைந்த ஆளே "ஆத்தாள்" ஆகிறாள். அம்மாவை அழைக்கும் ஆகச் சிறந்த சொல். ஆனால், இன்று இச்சொல் மிகவும் அருகிவிட்டது. எங்கள் வீட்டில் கூட என் தந்தையும், தாயும் தங்கள் பெற்றோர்களை ஆத்தா, அப்பச்சி என்றே இன்றளவும் நினைவுபடுத்துவர். ஆனால், நானோ என் பிள்ளைகளோ அம்மா அப்பா என்றே அழைக்கின்றோம். கால மாற்றத்தால் அருகி வருகிறாள் ஆத்தா.

## 2.அப்பச்சி

வயது முதிர்ந்தவர்கள் "அப்பச்சி" என அழைத்துக் கேட்டிருப்போம். "அப்பச்சி சத்த என்கூட துணைக்கு வாய்யா" என்ற அப்பத்தா, ஆயாக்களின் குரல்கள் காதில் எதிரொலிக்கின்றன. இச்சொல்லும் இன்று அருகிவிட்டது. "அப்பச்சன்" என்ற சொல்லே அப்பச்சி என மருவி வழங்கி வருகிறது.



அப்பன்+அச்சன் (தந்தை) = அப்பச்சன் என்பது தந்தையின் தந்தையைக் குறிப்பிடுகிறது. அப்பச்சன் என்றிருக்க வேண்டிய சொல் அப்பச்சி என்று வழங்கி வருகிறது. பாட்டனைக் குறிக்க வேண்டிய அப்பச்சி ஏன் தந்தையை அழைக்கப் பயன்பட்டிருக்கிறது என்பதை ஆய்ந்தோமானால், பாட்டனைத் தந்தை பெயராலும் பாட்டியைத் தாய் பெயராலும் அழைக்கும் வழக்கத்தின் தலைமாற்று என்று கருத இடமளிக்கிறது.

ஆத்தா, அப்பச்சி என்று வாய்நிறைய, மனம் நிறைய அழைக்கும் நம் நகரத்தார் பெருமக்களின் பேச்சு வழக்குச் சொற்களை நம் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்போம்.

– தொடர்ந்து பேசுவோம்



தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். லட்சியத்திலிருந்து 1000 தடவை வழுக்கி விழுந்தாலும், லட்சியத்துக்கு உழைப்பதில் பிழைகள் நேர்ந்தாலும் திரும்பத் திரும்ப அந்த லட்சியத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். லட்சியத்தை அடைய 1000 தடவை முயலுங்கள். அந்த 1000 தடவை தவறினாலும் இன்னுமொரு முறை முயலுங்கள். முயற்சியைக் கைவிடாதீர்கள்.

– சுவாமி விவேகானந்தர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani







**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

# பெண் கதவு. ஆண் பூட்டு

காலகாலமாக கட்டமைக்கப்பட்ட நமது இல்லறவியல் புரிதலின்றி ஆட்டம் கண்டு விடுகிறது என்பதே உண்மை. புரிந்துணர்வும், விட்டுக் கொடுத்தலுமே இல்லற வாழ்வின் அடித்தளமாக அமைகிறது. இல்வாழ்வில், துணையின் குற்றங்குறைகளைப் பெரிதுபடுத்தாது ஏற்றுக்கொள்வதும், அன்பு, காதல், நேசம், பரிவு, இரக்கம் பாராட்டுவதும் அவசியமாகிறது.

மனைவியானவள் கணவனுக்கு இரண்டாம் தாயாக அமைய வேண்டும். கணவனானவன் மனைவிக்குத் தந்தைக்கு நிகரானவாக அமைய வேண்டும். இருவருக்கும் சமமாக இருக்கவேண்டியது புரிதல், காதல், சகித்தல், மதித்தல்.

வறுமையில் கணவனை நேசிக்கும் பெண்ணும் முதுமையில் மனைவியை நேசிக்கும் ஆணும் தான் இந்த உலகில் தலைசிறந்த தம்பதியர்.

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'

பெண் கதவு. ஆண் பூட்டு என எழுத்தில் நூலக வெளிவந்த எனது இந்த வாழ்வியல் கட்டுரைத் தொகுப்பு இந்த இதழ் முதல் தொடர் கட்டுரையாக நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் படித்து பயன் பெறும் வகையில் வெளிவருகிறது .

வாழும் முறை அறிந்து வாழ இத்தொடர் இன்றைய நமது சமூகம், மற்றும் வளரும் தலைமுறையினருக்குப் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை

அன்புடன்
சேவு. முத்துக்குமார்

பெண் கதவு. ஆண் பூட்டு – 1

# எண்ணமே வாழ்க்கை

–சேவு.முத்துக்குமார், காரைக்குடி



கணவனின் அன்புக்கு கட்டுப்பட்டு நடக்கும் மனைவியும், மனைவியின் அன்புக்குக் கட்டுப்பட்டு நடக்கும் கணவனும் இருந்தால் வாழ்க்கையில் என்றும் வெற்றி தான்.

இல்லற வாழ்க்கை என்பது இன்று பலருக்கு, எதிர்பார்த்து வந்தது கிடைக்காத காரணத்தால், இல்லாத வாழ்க்கை ஆகிவிட்டது. தேவைகளும், எதிர்பார்ப்புகளும் அதிகரிக்க, அதிகரிக்க கணவனுக்கு மனைவி மீது அன்பில்லாமலும்.. மனைவிக்கு கணவன் மீது அன்பில்லாமலும் போகிறது.. கடமைக்கு, சமுதாயத்திற்காக இன்று பலர் வாழ்ந்து கொண்டிக்கிறார்கள்.

ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வதும், தாக்கிக் கொள்வதும், இந்த நரக வாழ்க்கை தேவையா? என்று எண்ணுவதும், கோபம் தலைக்கேறிய நிலையில் இல்லாதன, பொல்லாதன செய்து சிறைபடுதலும் இன்று நாம் அன்றாடம் செய்தித்தாளிலும், தொலைக்காட்சியிலும் காணும் காட்சி ஆகும்.

அமைதி, அன்பு பொறுமையின் இலக்கணமாகப் பெண்களைக் காணும் அதே வேளையில் ஆணவம், அகங்காரம், அடங்காமை உள்ள பெண்களையும் நாம் காண்கிறோம், இரண்டாவது வகைப் பெண்களை தொலைக்காட்சியில் அதிகம் காண இயலும். எதைக் காண்கிறோமோ அதுவாகவே மாறும் இயல்பு, மனதுக்கு உண்டு,

இன்று பெரும்பாலான குடும்பங்கள் அமைதியின்றி தவிப்பதற்கு முக்கிய காரணியாக அமைவது தொலைக்காட்சித் தொடர்களே என்று சொன்னால் அது மிகையாகாது."

இரக்க மனம் படைத்த பெண்ணும், அரக்க குணம் கொண்டவளாக ஆவாள் என்பதற்கான ஒரு கற்பனை கதை. ஒருமுறை, வீட்டு வாசலில் ஏற்பட்டிருந்த பெரிய குழி ஒன்றில் தவளை ஒன்று தவறி விழுந்து, வெளியே வர இயலாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது. மாலா அக்காட்சியைக் கண்டாள், மிகுந்த இரக்கம் கொண்டு உயிருக்குப் போராடிய தவளையைக் காப்பாற்றினாள். தவளை அவளுக்கு மூன்று வரம் தந்தது. "உனக்கு அளிக்கும் வரத்தில் ஒரு நிபந்தனை. நீ எதை விரும்பிக் கேட்டாலும், உனக்குக் கிடைப்பது போல பத்து மடங்கு உன் கணவனுக்கும் கிடைக்கும். ஆகவே யோசித்து கேள்" எனச் சொன்னது



"உலகிலேயே அழகான பெண்ணாக மாற வேண்டும்" என மாலா கேட்ட முதல் வரத்திற்கு, அழகான பெண்ணாக மாறினாள், அதே நேரம் அசிங்கமான தோற்றம் உடைய அவளுடைய கணவன் பத்து மடங்கு அழகானவனாக மாறினான். அவள் கேட்ட இரண்டாவது வரம் "பெரிய பணக்காரியாக வேண்டும்". அதே வேளையில் அவள் கணவனும் பத்து மடங்கு பணக்காரனாக ஆனான்.

தன் மீது கவனம் இல்லாத, பிரியம் இல்லாத கணவனை என்ன செய்யலாம் என யோசித்த அவள் மனது, உடனே "எனக்கு மர்மக் காய்ச்சல் வரவேண்டும்" என எண்ணியது. ஆனால் பத்து மடங்குடன் கூடிய மீட்க இயலாத மர்மக் காய்ச்சலால் அவள் கணவன் இல்லாமல் மாண்டு போனான். 'எண்ணமே வாழ்க்கை'.



"சென்றதினி மீளாது" என்பதற்கிணங்க அவள் வாழ்க்கை அர்த்தமற்றுப் போனது, சற்று யோசித்து "நான் நல்லவளாக மாற வேண்டும்" என அவள் கேட்டிருந்தால் அவளை விட பத்து மடங்கு அவள் கணவன் நல்லவனாக மாறி இருப்பான், வாழ்க்கை இன்பமயமாக மாறியிருக்கும். "இல்லத்தரசி" என்பதே பெண்ணுக்குப் பெயர், "இல்லத்தரசன்" என்பது இல்லை. ஆகவே இல்லறத்தை நல்லறமாக மாற்றுவது பெண்ணின் கையில் தான் உள்ளது.

நன்றி : ஓவியம்.மோகன் மணிமாலா



கட்டுரை ஆசிரியர் சேவு. முத்துக்குமார் அவர்கள் காரைக்குடியில் வசிக்கும் இரணிக்கோவிலைச் சேர்ந்த நகரத்தார். காரைக்குடி எஸ்.எம்.எஸ்.வி மேல்நிலைப்பள்ளியில் முதுகலைத் தமிழாசிரியராய்ப் பணியாற்றுபவர். கவிஞராக, பேச்சாளராக, எழுத்தாளராக, நாடக ஆசிரியராக, சதுரங்க ஒருங்கிணைப்பாளர் என பன்முகத் திறமை கொண்டவர். தினமலர் நாளிதழ் வழங்கிய "இலட்சிய ஆசிரியர்" விருதினைப் பெற்றவர்.

# வாழ்த்தி மகிழ்வோம்...



மலேசிய தன வைசிய சங்கத் துணைத் தலைவரும் தேவகோட்டை – மாத்தூர் மணலூர் பிரிவை சேர்ந்த ( கல்லுப்பட்டியார் வகை) பெ.இராமன் செட்டியார் மகளுமான செல்வி.வைஷ்ணவி இராமன் அண்மையில் நடந்த பாங்கி UKM மலேசியத் தேசியப் பல்கலைக்கழகத்தின் 51ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் மருத்துவ பட்டம் பெற்றார்.

தொடக்க கல்வியை தலைநகர் தேசிய வகை ஸ்ரீ சிகாம்புட் தமிழ் பள்ளியில் தொடங்கிய அவர் கோலாலம்பூர் ஈப்போ ரோடு பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும் பந்திங் மெட்ரிக்குலேஷன் கல்லூரியிலும் படித்தவர்.

செராஸ் யூ.கே.எம் ல் மருத்துவ படிப்பைத் தொடர்ந்த அவர் 2023ம் ஆண்டு மருத்துவ தேர்வில் வெற்றி பெற்று நவம்பர் 25, 2023 அன்று நடை பெற்ற பட்டமளிப்பு விழாவில் மருத்துவ பட்டம் பெற்றார்

**மருத்துவத் துறையில் அவரது பணி சிறக்க நாம் நகரத்தார் மின்னிதழ் சார்பாக நாம் அனைவரும் வாழ்த்துவோமாக !**

"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



## PL RAMANATHAN (KANDANUR)

**INSURANCE ADVISOR**
LIC of india, Thiruvotriyur Branch
**Mobile : 99 40 132 132**

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

## LIFE INSURANCE CORPORATION OF INDIA

Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.
Tel.: (O) 2345 1530 (M) 99401 32132
E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com

LIC LIFE INSURANCE CORPORATION OF INDIA

## நல்லவை சொல்லும் நகரத்தார் படைப்புகள் – 2

# அருள்மிகு செங்கிடாய்க் கருப்பர் படைப்பு – இராயவரம்

–இராம.சொக்கலிங்கம், நற்சாந்துபட்டி

வாழி நகரத்தார் வள்ளன்மை மிக்கோர்கள்
ஊழி பலவும் உயர்ந்திருக்க – ஆழிசூழ்
இத்தலத்தில் கோயில் இயற்றினோர் வாழ்கவே
எத்தலம் போற்ற இனிது – திருமுருக கிருபானந்தவாரியார்

இப்படி நகரத்தார் அன்றி, மற்றைய ஆன்றோர்களால் புகழப்பட்ட நம் சமூகம் ஜனத்தொகை எண்ணிக்கையில் குறைவே. ஆனால் அவர்களின் நற்செயல்கள் எண்ணிலடங்கா. மன்னர் பின்னோர் என்பதற்கேற்ப, கோவில்கள் கட்டினர். திருப்பணிகள் செய்தனர். பசுமடங்கள் அமைத்தனர். தங்குவதற்கான சத்திரங்கள் கட்டினர். கல்விச்சாலைகள் ஏற்படுத்தினர். தான தர்மங்கள் ஏராளம், ஏராளம்.

நகரத்தார் குலத்தில் படைப்புகள் என்பது ஒரு வழிபாட்டு முறையாகும். வாழும் காலத்திலேயே உறவுகளை உதாசீனப்படுத்தி விடும் காலம் இது. எதிர்காலத்தில் இப்படியெல்லாம் வரும் என்று நினைத்துத்தானோ என்னவோ ஆறேழு தலைமுறைக்கு முன்பே, ஆண்டுக்கு ஒருமுறை முன்னோர்களுக்கு படையலிட்டு வணங்கும் வழக்கத்தை வைத்திருக்கிறார்கள் நகரத்தார்கள். இதற்காக உருவானது தான் படைப்பு மற்றும் படைப்பு வீடு.

எந்த ஊரில் இருந்தாலும், வாழ்ந்து செழித்த முன்னோர்களை வருங்கால சந்ததிகள் மறந்துவிடக் கூடாது என்பதற்காகவே நகரத்தார்களிடையே ஆண்டுக்கு ஒருமுறை இப்படைப்பு குடும்ப அளவிலும், குடி அளவிலும், பங்காளிகள் அளவிலும், ஊர் அளவிலும் கொண்டாடப்படுதல் உண்டு.

படைப்பு என்றால் ஒரு குடும்பத்தின் அத்தனை கிளைகளும், பங்காளிகளும் எந்த தேசத்தில் இருந்தாலும் தவறாமல் வந்து விடுவார்கள். சுய விருப்பு,வெறுப்புகளை அறவே களைந்து சமூக நலத்திற்காக நடைபெறும் கூட்டு வழிபாட்டின் பிரதிபலிப்புதான் இந்த படைப்பு .பல்வேறு ஊர்களில் இருந்து வரும் பங்காளிகள் அனைவரும் ஒன்று கூடி நடத்தும் படைப்பு நகரத்தார்களின் ஒற்றுமையின் வெளிப்பாடு. வருடம் ஒருமுறை நடைபெறும் இந்நிகழ்ச்சி பல்வேறு ஊர்களில் இருந்து வரும் நகரத்தார்களுக்கு சமூகத்தின் பிணைப்புப் பாலமாக திகழ்கிறது என்றால் அது மிகையாகாது .

நமது நகரத்தார் பண்பாட்டிற்கு பெருமை சேர்க்கும் நமது படைப்பு முறைகளைப் பற்றி நாமும், இன்றைய வளரும் தலைமுறையினரும் அறிந்து கொள்வது அவசியம். இம்முனைப்பில் நாம் நகரத்தார் மின்னிதழ் தனது பங்களிப்பாக" நல்லவை சொல்லும் நகரத்தார் படைப்புகள் " எனும் கட்டுரைத் தொடர் வாயிலாக நம் 76 ஊர்களில் நடைபெறும் படைப்புகள் குறித்து வெளியிட்டு வருகிறது.

இத்தொடர் வரிசையில் இந்த இதழில் இரணிக்கோவிலார் இராயவரத்தில் நடத்தி வழிபடுகிற அருள்மிகு செங்கிடாய்க் கருப்பர் படைப்பு பற்றி பார்க்க உள்ளோம்.

இந்த ஆண்டு அருள்மிகு செங்கிடாய்க் கருப்பருக்கு 31 வது படைப்பு கார்த்திகை 14 ( 30.11.2023 ) அன்று தொடங்கி சிறப்பாக நடைபெற்றது.

## அருள்மிகு செங்கிடாய்க் கருப்பர் படைப்பு – இராயவரம்



நகரக் கோவில்களுள் ஒன்றான இரணிக்கோவிலார் பல ஊர்களில் படைப்பு நடத்தி வழிபடுகின்றார்கள். அதில் மற்றவர்களும் புகழ்ந்து பேசப்படும் படைப்புகளில் இராயவரத்தில் நடந்துவரும் அருள்மிகு செங்கிடாய்க் கருப்பர் படைப்பு சிறப்பானது.

படைப்புகள் அதிகமாக நடந்துவரும் இராங்கியத்தில்தான் அருள்மிகு செங்கிடாய்க் கருப்பருக்கும் கோவில் வீடு ஒன்று அமைத்து, வழிபட்டு வந்தார்கள். இந்தப் படைப்பிலும் கீழ்க்கண்ட ஒன்பது ஊர் இரணிக்கோவில் பங்காளிகள் தான் கூடிப் படைத்து வந்தனர்.

1. கொப்பனாபட்டி
2. இராங்கியம்
3. மிதிலைப்பட்டி
4. ராயவரம்
5. குருவிக்கொண்டான்பட்டி
6. செவ்வூர்
7. வலையபட்டி
8. உலகம்பட்டி
9. காரைக்குடி என்ற ஒன்பது ஊர்கள்.

## படைப்பு வரலாறு :–

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் இராங்கியம் கோவில் வீடு எதிர்பாராவண்ணம் தீக்கிரையானபோதிலும் பேழைப்பெட்டிகள் மட்டும் சேதமின்றித் தப்பின. அருள்மிகு செங்கிடாய்க் கருப்பர் அருள்தான் காரணம். எல்லா ஊர் பங்காளிகளும் கூடிப்பேசி எடுத்த முடிவுப்படி பேழைப் பெட்டிகளை தலைச்சுமையாகவே எடுத்து சென்று இராயவரத்தில் ஒரு வீட்டில் வைத்துள்ளார்கள்.



காலையில் பேழைப்பெட்டிகளை எடுக்கப் போன பொழுது, அதை எடுக்க முடியவில்லை. அங்கேயே வைத்து படையுங்கள் என்று கருப்பர்அருளியபடி படைத்து வந்தார்கள். நாளடைவில் படைப்பை விரிவுபடுத்தி வழிபட, இராயவரம் புதுமனையில் இடம் வாங்கி புதிய கட்டிடங்கள் கட்டி, அங்கு பேழைப் பெட்டிகளைக் கொண்டு வந்து வைத்து பொதுப்படைப்புகள் நடந்து வருகின்றன.

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வரும் படைப்பு, கார்த்திகை மாதம் ஒரு வியாழன் தொடங்கி, திங்கட்கிழமை காலை பணியாரம் வாங்கிக் கொண்டு செல்லும்வரை நடக்கும்.

### படைப்பு நடைமுறையும், விவரங்களும் :

முதல் நாள் புதன்கிழமை கணபதி ஹோமம் நடைபெறும். வியாழன் மாலை அரிசி அளத்தல், புள்ளிவரி வாங்குவதுடன் இரவு குட்டி நிமித்தத்திற்கு அறைக்குள் செல்லும் நபர்களையும் தேர்ந்தெடுப்பார்கள். ஏற்கனவே உள்ளே சென்று வந்தவர்களுக்கு மறு அனுமதி கிடையாது. வியாழன் மாலை 4 மணியளவில் பேழைப்பெட்டிகளை எடுத்துக் கொண்டு "மலைக்கொழுந்து ஈஸ்வரன் கோவில்" நீர்நிலைக்கு கொண்டு சென்று சேலை வேஷ்டிகளை அலசிக்கொண்டு வருவர்.

பேழைப் பெட்டிகளுடன், பிரார்த்தனை செய்து வைத்த ஏராளமான அரிவாள்களையும், கை மணிகளையும் எடுத்துச் சென்று, கொண்டு வருவர். மணிகளை அடித்து, எச்சரிக்கை ஓசை எழுப்பிச் செல்லும் பொழுது எந்த ஜனங்களாக இருந்தாலும் அச்சப்பட்டு ஒதுங்கிக் கொள்வார்கள்.



வியாழன் காலை இராயவரம் பங்காளிப் பெண்களுடன் மற்ற பெண்மக்களும் கலந்து கொண்டு பணியாரம் ஊற்றுவார்கள். ஈரப்பச்சரிசியை உரலில் இடித்த காலம் போய், வாங்கி வைத்துள்ள மெஷினில் மாவு அரைத்து, கருப்பட்டி பாகு காய்ச்சி, அதைக்கலந்து நெய்யில் சுட்டு எடுப்பார்கள். அதை வைப்பதற்கென தனி அறைகளும் உள்ளன. திங்கட்கிழமை காலை புள்ளிக்கு இத்தனை என்று பைகளில் போட்டுக் கொடுப்பார்கள். பெண் பிள்ளைகளுக்கும் பணியாரம் உண்டு.



வியாழன் மாலை பேழை வந்ததும் கருப்பருக்கு அலங்காரம் முடித்து, படையலிட்டு, சாமியாடி சாமி அழைத்ததும், செங்கிடாயை படைப்பு வீட்டு சாமிமுன் நிறுத்தி, நீர் விளாவ, குட்டி உத்திரவு தந்து, தானாகவே அறைக்குள் சென்றுவிடும். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் குளித்துவிட்டு, உள்ளே சென்று குட்டியை நிமித்தம் செய்து, தோல் தவிர கறியை துண்டுகளாக்கி தருவார்கள். அதை அண்டாவில் இட்டு ரசம் வைப்பார்கள். தோலை அதற்கென்று உள்ள இடத்தில் சேமம் சேர்த்து விடுவார்கள்.

படைப்பில் முக்கியமான நாளான வெள்ளிக்கிழமை மதியம் அருள்மிகு செங்கிடாய்க் கருப்பருக்கு அலங்காரம் செய்து, பொங்கல் படையல் மற்றும் கிடாய் ரசம் வைத்து பூஜை நடைபெறும். சாமியாடிக்கு அருள்வந்து படைப்பை ஏற்றுக் கொண்டதும் மற்றவர் கேள்விகளுக்கும் அருள்வாக்கு கூறுவார்.

மறுநாள் சனிக்கிழமை இரவு, பெண் தொட்டிச்சி தெய்வத்திற்கும் படைப்பு நடைபெறும். படையலுடன் கோழிரசம், களி மற்றும் முட்டை தோசை நிவேதனம் செய்யப் பெற்று படைப்பு பூஜை நடைபெறும்.

படைப்பில் பங்காளிகளும் பிறந்த பெண் மக்களும் பேரன் பேத்திகளும், மாப்பிள்ளைகளும் கலந்து கொள்வார்கள். படைப்பை பார்க்க வேண்டுமென்று நகரத்தார் பெருமக்கள் நிறைய வருவர். புதன்கிழமை முதல் சாப்பாடு துவங்கி விடும். காலை,மதியம்,மாலை, இரவு என சாப்பாடு தடபுடலாக இருக்கும்.

வெள்ளிக்கிழமை பிற்பகலிலும், சனிக்கிழமை யிலும் பட்டிமன்றம், சொற்பொழிவு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பக்தர்கள் சோர்வின்றி இருக்க ஒவ்வொரு நாளும், காபி, டீ, சுக்குமல்லி காபி, சூப் இவைகளை தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருப்பார்கள்.



ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அலங்காரம் பிரிக்கப்பட்டு, பேழைகளை "மலைக்கொழுந்து ஈஸ்வரன் கோவில்" நீர்நிலைக்கு கொண்டு சென்று அலசிக் காய வைத்து திரும்ப சன்னிதானம் கொண்டு வந்து பத்திரமாக கட்டி வைத்த பின்பு அனைவரும் ஒரு நாள் கோவிலில் இருந்து மறுநாள் அதிகாலையில் பிரசாதம், பனியாரம், காளாஞ்சி, கஞ்சி, ஊறுகாய் பெற்றுக்கொண்டு அவரவர் ஊருகளுக்கு சந்தோஷத்துடனும், மனதிருப்தியுடனும் வீடு திரும்புவார்கள்.

செங்கிடாய் கொண்டு வரும் பொறுப்பை கொப்பனாபட்டி கொண்டுள்ளார்கள். பங்காளிகள் ஏற்றுக் படைப்பு வீட்டு சாமியாடியாக இருந்து வருபவர்கள் கொப்பனாபட்டி தெய்வத்திரு. இராம.இராக்கப்ப செட்டியார் அவர்கள் குமாரர் திரு.ராக. செல்வம் செட்டியார் அவர்கள். பூசாரிகளாக இராயவரம் பங்காளிகள் புள்ளிப்படி திருமணம் ஆனவர்கள் மட்டும் வரிசைக் கிரமமாக இருந்து வருகிறார்கள்.



மேலும் கொப்பனாபட்டியில் இளையாத்தாங்குடி வயிரவன் கோவில் புள்ளிகள் குறைவான எண்ணிக்கையில்தான் உள்ளனர். மற்ற அனைவரும் இரணிக்கோவில் பங்காளிகள் தான். ஆகவே காவல் வரி வசூல் செய்து, காவல் வைத்துவிட்டுத்தான் படைப்புக்கு வருவார்கள்.

1. கொப்பனாபட்டி : அருள்மிகு முத்து விநாயகர் கோவில். கொன்னையூர் அருள்மிகு முத்து மாரியம்மன் கோவில் மூலங்குடி பொய் சொல்லா மெய்யர் கோவில்.

2. மிதிலைப்பட்டி, குருவிக் கொண்டான்பட்டி ஒருபகுதியினர் மற்றும் இராங்கியத்தில் ஒரு பகுதிப் பங்காளிகள் : அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் கோவில் – செவலூர்.

3. இராங்கியத்தில் உள்ள மற்றொரு பகுதியினர் அருள்மிகு செங்கிடாய்க் கருப்பர் சுவாமிகள், துவார். ஞாயிற்றுக்கிழமை மாப்பிள்ளை விருந்து என்று கூறுவர். விஷேடமான சாப்பாடு அன்று இருக்கும்.

படைப்பு வீட்டிற்கு எதிரே உள்ள இடத்தை கோவில் வீட்டைச் சேர்ந்த பெண் பிள்ளை நற்சாந்துபட்டி முரு.மங்களம் ஆச்சி அவர்கள் நமது செங்கிடாய் கருப்பையா சுவாமிக்கு காணிக்கையாக கொடுத்து உள்ளார்கள்.




படைப்பு வீட்டில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்காக முன்புறம் பெரிய மணி மண்டபமும், மற்ற புழக்கங்களுக்காக வலப்புறம் ஒரு மண்டபமும், பெரியதான பந்திக்கட்டு ஒன்றும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

படைப்பு வீட்டில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்காக முன்புறம் பெரிய மணி மண்டபமும், மற்ற புழக்கங்களுக்காக வலப்புறம் ஒரு மண்டபமும், பெரியதான பந்திக்கட்டு ஒன்றும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. அருள்மிகு செங்கிடாய்க் கருப்பருக்கு சொந்தமாக திருமண மண்டபம் ஒன்று இராயவரத்தில் உள்ளது.

படைப்பு சிறப்பாக, நிறைவாக நடந்தேற அனைத்து பங்காளிகளும் ஆர்வமாகவும் ஒத்துழைப்பதோடு அந்தந்த வருட காரியக்காரர்களின் பணியும் சிறப்பானது.

அழகான ராயவரம் கோவிலில் குடிகொண்டு
அரசாள வந்த கருப்பன்
அடிதடியின் வாழைபோல் எனது குலங்கோத்திரம்
அத்தனையும் காக்கும் கருப்பன்
மேலாளர் கீழாளர் பேதங்கள் இல்லாது
மெய்யாள வந்த கருப்பன்
முன்னோடி சப்பாணி இருவரையும் கொண்டிந்த
உலகாள வந்த கருப்பன்
புது மனையில் செங்கிடாய் கருப்பனிவன்
கோவில் கொண்டாடு மனமே!
புண்ணியத் தீர்த்தமும் மரிக்கொழுந்து பொய்கையில்
பெற்றாலே புகழோடு வாழ்வு வருமே!



பொய் சொல்லி தப்பிக்காதே; உண்மையை சொல்லி மாட்டிக்கொள். பொய் வாழ விடாது; உண்மை சாக விடாது

– சுவாமி விவேகானந்தர்

# S BAGS

## காரைக்குடி

## திருமண தாம்பூலம் BAGS




**CONTACT :829 829 6601**

**www.sbagsandgifts.com**

# இழை எடுப்போம்... வளம் பெறுவோம்..!!

இழை எடுத்துக் கொடுக்குமிந்தத் திருவிழா
பிள்ளையார் நோன்பென்னும் ஓர் விழா
தலைவனவன் தந்திடவே மனது மகிழ்ந்திடும்
பக்தியோடு வாங்கியே தான் உண்டிடும்

பண்டைக்கால மரபு வழி வந்தது
இன்றும் கூட நிலைபெற்றே நிற்பது
மரகதப் பிள்ளையாரின் அருளதுவும் பெரியது
கொண்டாடும் போதினிலே இன்பங்கள் தருவது

பண்டைக்கால மரபு வழி வந்தது
இன்றும் கூட நிலைபெற்றே நிற்பது
மரகதப் பிள்ளையாரின் அருளதுவும் பெரியது
கொண்டாடும் போதினிலே இன்பங்கள் தருவது


பண்டைக்கால மரபு வழி வந்தது
இன்றும் கூட நிலைபெற்றே நிற்பது
மரகதப் பிள்ளையாரின் அருளதுவும் பெரியது
கொண்டாடும் போதினிலே இன்பங்கள் தருவது

பண்டைக்கால மரபு வழி வந்தது
இன்றும் கூட நிலைபெற்றே நிற்பது
மரகதப் பிள்ளையாரின் அருளதுவும் பெரியது
கொண்டாடும் போதினிலே இன்பங்கள் தருவது

பண்டைக்கால மரபு வழி வந்தது
இன்றும் கூட நிலைபெற்றே நிற்பது
மரகதப் பிள்ளையாரின் அருளதுவும் பெரியது
கொண்டாடும் போதினிலே இன்பங்கள் தருவது



கவிச்சுடர்
தஞ்சை பழ வள்ளியப்பன்
மதுரை



# சாலி ஆச்சி...

– இராம.மெய்யம்மை ஆச்சி, காரைக்குடி

இளமையும் சுறுசுறுப்பும் தான் என்னைக்குமே அழகு அப்படின்னு எல்லா இடத்திலேயும் பொதுவான ஒரு கருத்து இருக்கு. உலக அழகி ஐஸ்வர்யா ராய் கூட கொட்டாவி விடும் போது சுமாரா தான் இருப்பாங்க அப்படின்னு சொல்றது உண்டு.

ஆனா முதுமையும் ஒரு அழகுதான் ரசனை உள்ளவங்களால மட்டும் தான் அதை ரசிக்க முடியும் .பஞ்சுப்பொதிபோல தலைமுடியும், அனுபவ ரேகை உள்ள நெற்றியும், தீட்சண்யமான கண்களும் ,பொக்கை வாய் புன்சிரிப்பும் எவ்வளவு அழகு.



அதுக்கு எடுத்துக்காட்டு தான் சாலியாச்சி. வயசு எண்பதுக்கு மேல ஆச்சு. படிச்சது அஞ்சாவது தான்.ஆனா செட்டியாரு மலேசியாவில் இருக்கும் போது ஆடிட்டருக்கே அவுக தான் கணக்கு குடுப்பாக.

இன்னைக்கு வரைக்கும் சாலிஆச்சிக்கி சுகர், தைராய்டு, பிரசர் அந்த மாதிரி எந்த பிரச்சனையும் கிடையாது. அது அந்த காலத்து பழக்கம் வழக்கத்தாலையும் உணவு முறையாலையும் வந்த குடுப்பினை. அவர்களுக்கு வயது முதிர்ச்சியினால வந்த தள்ளாமை மட்டும்தான் இருக்கு.

காலையில ஆச்சி கண்ணு முழிச்சபோது மருமக "சரசக்கா இன்னைக்கு ஆச்சிக்கும் உங்களுக்கு மட்டும்தேன் சாப்பாடு, ஒரு கூட்டும் பொரியலும் பண்ணுனா போதும். அயித்தை எந்திரிக்க விட்டி அவுகளையும் ஒரு வார்த்தை கேட்டுக்குங்க "அப்படின்னு சொல்லிட்டு இருந்தா.

மகள் மங்கை ஆத்தாவை பாத்துட்டு பக்கத்துல வந்து உட்கார்ந்தா. ஆச்சிக்கு நேத்து மக வந்து சொன்னது ஞாபகம் வந்துச்சு. "ஆத்தா உங்க சின்ன பேத்தி மாசமா இருக்கா. அதனால அடைக்காத்தா படப்பில வைக்க கொலுசும் தண்டையும் பண்ணி கொண்டாந் திருக்கேன்னு" காட்டினா.

"இன்னைக்கு யாரு வீட்ல ஆத்தா படப்பு"
நம்ம வெள்ளைக்கட்டி வீரப்பன் வீட்லைன்னு அண்ணே சொன்னாக. நம்ம ராமாயி கல்யாணம் மண்டபத்துக்கு பக்கத்துல இருக்கே அந்த வீடாத்தா"

"சரி நீ போய் கௌம்பாத்தா"
"அப்படியே எனக்கும் ஒரு நல்ல சேலை வெளியில எடுத்து வச்சுட்டு போத்தா" அப்படின்னு பீரோசாவியை குடுத்தாக சாலியாச்சி.

"ஏன்"?
"ஆத்தா முந்தி மாதிரி எதையும் விபரமாக் கேக்கிறதில்ல. தாக்கல் சொன்னா கேட்டுக்குவாக. ஆனா இன்னைக்கு என்னவோ படப்பை பத்தி ரொம்ப கேட்டாக அதனால கூட்டிட்டு போவோமான்னேன்"

"சேச்சே ! பாவம் ஆத்தா சும்மா கேட்டு இருப்பாக அவுகள கூட்டிட்டு போய் ஏன் சிரமப்படுத்தணும்? வீட்ல இருந்தா நிம்மதியா நேரத்துக்கு சாப்பிட்டு படுத்துருப்பாக. சரசக்கா பாத்துக்கும் .நம்ம போயிட்டு வருவோம் அப்படின்னாக.

"சரி அண்ணே. அங்க வந்தாலும் உட்கார்ந் தே இருக்கணும். கூட்டமா இருக்கும். பரவால்ல நம்ம போவோம்". என்றாள் மங்கை.

எல்லாரும் கிளம்பி போய்ட்டாங்க .சரசக்கா சமையல முடிச்சிட்டு கைய முந்தாங்கில தொடச்சிக்கிட்டே வந்தா.

"சரசு வேலையெல்லாம் முடிச்சிட்டியா?
"ஆமாச்சி ."
"சரி உன் போனை சத்த தா "
"ஏன் ஆச்சி?"
" ஏன்னு சொன்னா தான் தருவியா"

ஆச்சி தலைமாட்டில ஒரு மஞ்ச பையில அவுக போன், கண்ணாடி, அவுக பீரோ சாவி எல்லாம் வச்சிருப்பாக. அதுல சரசு விட்டு போனையும் வாங்கி வச்சுக்கிட்டாக. சேலையை மாத்திக்கிட்டாக.

"சரசு ஆட்டோகார வெள்ளையன கூப்பிட்டு இருக்கேன் .வீடெல்லாம் பத்திரமா பூட்டி சாவி எடுத்துக்க."

"ஆச்சி போன தாங்க ஆச்சி .நா அண்ணன் கிட்ட பேசுறேன். அவுகள கேக்காம உங்களை வெளியில கூட்டிட்டு போனா என்ன வந்து தொலைச்சுப்புடுவாக. இப்ப எங்க ஆச்சி போகணும்? உங்களுக்கு உடம்பு சரி இல்லையா" ?

"எனக்கு எல்லாம் தெரியும். நீ பேசாம வா. "நேத்து பிள்ளைக்கு பள்ளிக் கூடத்துக்கு பணம் கட்டணும்னு தம்பியை கேட்டியே தந்துட்டாகளா ?

"இன்னும் இல்ல ஆச்சி"
". சரி. நான் சொல்லி வாங்கி தற்ரேன் வா"

சரசு பத்திரமாக கைப்பிடித்து வர இருவரும் ஆட்டோ ஏறி படப்புக்கார வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

படப்பு வீட்டில் ஆச்சியைப் பார்த்தவுடன் எல்லோரும் எழுந்து வந்து வாங்க அயித்தை, வாங்க ஆயா, வாங்க அப்பத்தா அப்படின்னு எல்லாரும் ஆளாளுக்கு கேட்டாக. பேரன் பேத்திய தூக்கிட்டு வந்து காட்டுனாக. நலன் விசாரிச்சாக.

ஆச்சிய பார்த்தவுடனே மகன் அவசரமா எந்திரிச்சு வர்றதப் பாத்துட்டு அவுக காதில படுற மாதிரி " தம்பி என்ன பூ போல பாத்துக்குறாக. வீட்டுக்குள்ள என்ன பத்தரமா வச்சிருந்தா இன்னும் ரொம்ப நாளைக்கு ஆத்தா நல்ல ஆயுசோட இருப்பேன்னு தம்பிக்கு ஆசை. ஆனா அது நம்ம கையில இல்லையே. ஆண்டவன் கூப்பிட்டா போக வேண்டியது தானே. எனக்கு உங்க எல்லாரையும் பாக்கணும்னு ஆசையா இருந்துச்சு. அதனால தான் கிளம்பி வந்துட்டேன்னு சிரிச்சாக. தம்பிக்கு பல பக்கத்திலும் வேலை. பிள்ளைகளை சிரமப்படுத்த கூடாதுன்னு நானே வந்துட்டேன்.



மகளும் மருமகளும் பக்கத்தில் வந்து உட்கார்ந்துட்டாக. எல்லா பிள்ளைகளும் வந்து சுத்தி உட்கார்ந்திருச்சுக. நல்லா சந்தோஷமா பேசிகிட்டு இருந்தாக ஆச்சி.

ஆத்தா ஆண்டவன் புண்ணியத்துல எனக்கு ஒரு குறைச்சல் இல்லை. வயசான காலத்துல பணங்காசு துணிமணி நகை நட்டு எதுக்கும் மனசு ஆசைப்படாது.

நாலு மனுசர பாக்கோணும் .வாயார நாலு வார்த்தை பேசோணும். அதுக்கு தான் மனசு ஏங்கும். உங்களை எல்லாம் கண்ணுக்குளிர பார்த்தது ரொம்ப சந்தோஷம். எல்லாரும் நல்லா இருங்க. "தம்பி நேரமாச்சு. நம்ம போவோமா. "அப்படியே சாமி வீட்டுக்குள்ள போயி அடக்காத்தாவ கும்பிட்டு ஒள்ளத்தி விபூதி பூசிக்கிட்டு போவோம்பா. சரசுக்கு பேப்பர்ல ஒள்ளத்தி விபூதி மடிச்சுக்க என்றார்கள் ஆச்சி.



வீரப்பன் ஓடிவந்து "ஆச்சி இல போட்டாச்சு சாப்பிட்டு போகலாம்னு " கெஞ்சினாக. தம்பி வீட்ல பண்ணது வீணா போயிரும். (செட்டிய வீட்டுக்கே ஊறிப்போன சிக்கனம்) நான் வீட்டுக்கு போறேன் இதெல்லாம் எனக்கு ஒத்துக்கவும் ஒத்துக்காது. உன் மனசு நோகாம ரெண்டு பழத்தை தா .கையில வாங்கிக்கிட்டு போறேன்" அப்படின்னாக.

அங்கே இருந்து கிளம்பும்போது ஆச்சி முகமே பிரகாசமா இருந்துச்சு. அவுகள பாத்துட்டு 'இனிமே விசேஷங்களுக்கு கிளம்பும்போது ஆத்தாவையும் ஒரு வார்த்தை கேட்கோணும். அவுக ஆசைப்பட்டா கண்டிப்பா கூட்டிட்டு வரணும்னு மகன் முடிவு பண்ணிக்கிட்டாக.

அங்கே இருந்தவுகள்ல கொஞ்ச பேராவது அப்படி நினைத்து இருக்கலாம். இனிமே நம்மளும் ஓல்ட் இஸ் கோல்ட் அப்படிங்கறதை புரிஞ்சுகிட்டு பெரியவங்களுக்கு ஆறுதலா சந்தோஷமா நாலு வார்த்தை பேசுவோமா. "மூத்தோர் சொல்லும் முதிர் நெல்லிக்கனியும் முன்னே துவர்க்கும் பின்னே இனிக்கும்" அப்படிங்கிறது அவ்வையார் பழமொழி நாமும் முதியோரை மகிழ்விப்போமே.

செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று.
உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும்,
சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை
ஒவ்வொரு நாளின் பகலிலும்
இரவிலும் உன் முன் நிறுத்து;
அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

நான் இப்போது இருக்கும்
நிலைக்கு நானே பொறுப்பு

– சுவாமி விவேகானந்தர்





# தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியில்

## சுய மதிப்பீடு அவசியமா ?

இராம.சொக்கலிங்கம் – நற்சாந்துபட்டி


அன்றாட வாழ்க்கையின் பரபரப்பில் பெரும்பாலும் கவனிக்கப்படாத சுய மதிப்பீடு, தனிப்பட்ட மற்றும் தொழில் முறை வளர்ச்சிக்கான திறவுகோலைக் கொண்டிருக்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகும்.



நிலையான மாற்றம் வழக்கமாக இருக்கும் இந்த உலகில், ஒருவரின் பலம் மற்றும் பலவீனங்களைப் பிரதிபலிக்கும் திறன் விலைமதிப்பற்றதாகிறது. இந்த கட்டுரை சுய மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை ஆராய்கிறது, இது வளர்ச்சியை எவ்வாறு ஊக்குவிக்கிறது, முடிவெடுப்பதை மேம்படுத்துகிறது மற்றும் ஒட்டு மொத்த நல்வாழ்வுக்கு பங்களிக்கிறது என்பதை ஆராய்கிறது.

## தனிநபர் வளர்ச்சிக்கு உதவுதல்:

சுய மதிப்பீடு ஒரு தனிநபரின் திறன்கள், மதிப்புகள் மற்றும் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக செயல்படுகிறது. தன்னை மதிப்பிடுவதற்கு நேரம் எடுத்துக்கொள்வதன் மூலம், தனிநபர்கள் தங்கள் பலங்களைப் பற்றிய நுண்ணறிவுகளைப் பெறுகிறார்கள், அவற்றை மூலதனமாக்க உதவுகின்றனர்.



அதேபோல், பலவீனங்களை அடையாளம் காண்பது முன்னேற்றத்தை நோக்கிய இலக்கு முயற்சிகளை அனுமதிக்கிறது. இந்த சுய பரிசோதனை செயல்முறை தனிப்பட்ட வளர்ச்சிக்கு அடித்தளமிடுகிறது, கற்றல் மற்றும் வளர்ச்சியின் தொடர்ச்சியான சுழற்சியை ஊக்குவிக்கிறது.

## முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துதல்:

தொழில் துறையில், திறம்பட முடிவெடுப்பது வெற்றியின் அடித்தளமாகும். சுய மதிப்பீட்டின் மூலம், தனிநபர்கள் தங்கள் முடிவெடுக்கும் பாணிகள், விருப்பத்தேர்வுகள் மற்றும் சார்புகள் பற்றிய ஆழமான புரிதலைப் பெறுகிறார்கள்.



தனிப்பட்ட முறையிலும் தொழில் ரீதியாகவும் தகவலறிந்த தேர்வுகளைச் செய்வதில் இந்த விழிப்புணர்வு முக்கியமானது. இது தனிநபர்கள் தங்கள் முடிவுகளை அவர்களின் மதிப்புகள் மற்றும் நீண்டகால இலக்குகளுடன் ஒருங்கிணைக்க உதவுகிறது, இது மிகவும் நிறைவான மற்றும் நோக்கம் சார்ந்த வாழ்க்கைக்கு பங்களிக்கிறது.

## இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் அடைதல்:


யதார்த்தமான மற்றும் அர்த்தமுள்ள இலக்குகளை அமைப்பது சுய மதிப்பீட்டின் அடிப்படை அம்சமாகும். தற்போதைய திறன்கள் மற்றும் மேம்பாட்டிற்கான பகுதிகளை மதிப்பிடுவதன் மூலம், தனிநபர்கள் தங்கள் அபிலாஷைகளுடன் பொருந்தக்கூடிய தெளிவான குறிக்கோள்களை நிறுவ முடியும்.




இந்த இலக்குகளை தவறாமல் மறுபரிசீலனை செய்வது தொடர்ச்சியான மாற்றங்களை அனுமதிக்கிறது, அவை பொருத்தமானவை மற்றும் அடையக்கூடியவை என்பதை உறுதிசெய்கின்றன. இந்த செயல்முறை தனிநபர்களை வெற்றியை நோக்கித் தள்ளுவது மட்டுமல்லாமல், அவர்களின் வாழ்க்கையில் நோக்கத்தையும் அதனை நோக்கி பயணிக்க திசையையும் ஏற்படுத்துகிறது.

## பின்னடைவை உருவாக்குதல்:

வாழ்க்கை சவால்கள் நிறைந்தது, அவற்றை வெற்றிகரமாக வழி நடத்துவதற்கான திறவுகோல் பின்னடைவு. தனிநபர்கள் துன்பத்திற்கு எவ்வாறு பதிலளிப்பார்கள் என்பதைப் புரிந்துகொள்ள உதவுவதன் மூலம் பின்னடைவை உருவாக்குவதில் சுய மதிப்பீடு முக்கிய பங்கு வகிக்கிறது.



சமாளிக்கும் வழிமுறைகள் மற்றும் கூடுதல் ஆதரவு தேவைப்படும் பகுதிகளை அடையாளம் காண இது அவர்களுக்கு உதவுகிறது. இந்த சுய விழிப்புணர்வின் மூலம், தனிநபர்கள் பின்னடைவுகள் மற்றும் சவால்களிலிருந்து வலுவாக மீண்டு, நெகிழ்ச்சியான மனநிலையை வளர்த்துக் கொள்ள முடியும்.

## தனிநபர் உறவுகளை மேம்படுத்துதல்:

தனிப்பட்ட மற்றும் தொழில்முறை உறவுகளில் பயனுள்ள தகவல் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பு முக்கியம். சுய மதிப்பீடு உணர்ச்சி நுண்ணறிவு மற்றும் பச்சாத்தாபத்தை வளர்ப்பதன் மூலம் சிறந்த தனிநபர் இயக்கவியலுக்கு பங்களிக்கிறது.

தங்கள் சொந்த உணர்ச்சிகள் மற்றும் எதிர்வினைகளைப் புரிந்து கொள்ளும் நபர்கள் மோதல்களை வழிநடத்தவும் நேர்மறையான உறவுகளை உருவாக்கவும் நன்கு தயாராக உள்ளனர். இது வீட்டிலும் பணியிடத்திலும் மிகவும் இணக்கமான மற்றும் உற்பத்தி சூழலை உருவாக்குகிறது.

## மாற்றத்திற்கு ஏற்ப தகவமைத்தல்:

நவீன உலகம் விரைவான மாற்றம் மற்றும் நிச்சயமற்ற தன்மையால் வகைப்படுத்தப்படுகிறது. சுய மதிப்பீடு தனிநபர்களை மாறும் சூழல்களில் செழிக்கத் தேவையான தகவமைப்புடன் தயார்படுத்துகிறது.




தங்கள் திறன்களை தவறாமல் மதிப்பீடு செய்வதன் மூலமும், வளர்ந்து வரும் போக்குகளுடன் இணைந்திருப்பதன் மூலமும், தனிநபர்கள் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அடையாளம் காணலாம் மற்றும் அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை நிலப்பரப்புகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப முன்னேறலாம்.

சுய மதிப்பீட்டு நடைமுறை தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியின் அடித்தளமாகும். சுயபரிசோதனை மற்றும் பிரதிபலிப்பு மூலம், தனிநபர்கள் தங்களைப் பற்றியும், தங்கள் இலக்குகளைப் பற்றியும், தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றியும் ஆழமான புரிதலைப் பெறுகிறார்கள்.

இந்த உயர்ந்த சுய விழிப்புணர்வு ஒரு திசைகாட்டியாக மாறுகிறது, இது தனிநபர்களை தகவலறிந்த முடிவெடுப்பது, சவால்களுக்கு நெகிழ்வான பதில்கள் மற்றும் அர்த்தமுள்ள இலக்குகளை அடைவதற்கு வழிநடத்துகிறது. தொடர்ச்சியான மாற்றத்தால் குறிக்கப்பட்ட ஒரு சகாப்தத்தில், சுய மதிப்பீட்டின் சக்தியைத் தழுவுவது ஒரு தேர்வு மட்டுமல்ல, செழிக்கவும் நிறைவான வாழ்க்கையை வாழவும் விரும்புவோருக்கு ஒரு தேவையாகும். எனவே, சுய கண்டுபிடிப்பு மற்றும் வளர்ச்சியின் உருமாற்ற பயணத்தை இடைநிறுத்தவும், சிந்திக்கவும், தொடங்கவும் சிறிது நேரம் ஒதுக்குங்கள்.



- நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன்.

- தீண்டாமையை தீவிர கொள்கையாகவும், உணவு உண்பதையே தெய்வமாக கருதும் வரை நீங்கள் ஆன்மிகத்தில் முன்னேற முடியாது.

- தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

– சுவாமி விவேகானந்தர்

# நம்பிக்கை தரும் தும்பிக்கையான் நோன்பு ..!!

(பிள்ளையார் நோன்பின் கதை)

–இராம.நா. இராமநாதன் – ஆ.தெக்கூர்

நகரத்தார்களுக்கே உரிய முக்கிய விழாக்களில் மிகுந்த தொன்மையும், பெருமையும் உடைய விழாவாக கடைபிடிக்கப்படுவது பிள்ளையார் நோன்பு ஆகும்.

சமூகம் ஒன்றின் வழியில் தலைமுறைகள் பல தாண்டி தொடர்ச்சியாய் வரும் பண்பாட்டு நடைமுறை மரபு ஆகும். மூத்த தமிழ் குடிகளில் நகரத்தார் எனப்படும் நாட்டுக்கோட்டை செட்டியார் தொன்மையான கலாச்சாரமும் பாரம்பரியமும் பெற்றவர்கள் . தம் மரபுகளை தொன்று தொட்டு கடைபிடித்து வரும் பாரம்பரிய சிறப்புடையவர்கள் நகரத்தார்கள்.



பூம்புகாரில் தங்களது மூதாதையர்கள் செய்து வந்த வழிபாட்டை அப்படியே இன்றளவும் நகரத்தார்கள் கடைப்பிடிகின்றனர். மன்னர் பின்னோராகிய நகரத்தார் சமூகத்தினர் அனைவரும் தொன்று தொட்டு வணங்கி வரும் விநாயகப்பெருமானை " மரகதப்பிள்ளையார் "என்று வரலாற்றுச் சான்றுகளும் , கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன.

அந்த மரகதப் பிள்ளையாரை கொண்டாடும் வகையில் அமைந்த விழாவானது " பிள்ளையார் நோன்பு " ஆகும்.

ஒரு விழா என்பது ஏன் கொண்டாப்படுகிறது, அதன் வரலாற்றுத் தொன்மை இவைகளை அறியும் போது அந்த விழா இன்னும் சிறப்பாகவும் வரும் சந்ததியினர் வரலாறு அறிந்து அந்த விழாவில் முழு ஈடுபாடு கொள்ளும் போது அந்த விழா முழுமையும் பெரும்.

## பிள்ளையார் நோன்பின் வரலாறு, பிள்ளையார் நோன்பு எடுக்கும் முறை ஆகியவற்றை இந்த கட்டுரையில் காணலாம்.


கார்த்திகை மாதம் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் கூடிய நாளில் பிள்ளையார் நோன்பு கடைப்பிடிக்கப்படுகிறது. பிள்ளையார் நோன்பு கார்த்திகை தீபத்துக்கு அடுத்த நாள் ரோகிணி நட்சத்திரத்தில் தொடங்கி, சதய நட்சத்திரத்தன்று நிறைவு பெறும். ' சட்டி ( சஷ்டி ) தொட்டுச் சதயம் விட்டு ' என்ற பழமொழி இந்த உண்மையை தெளிவு படுத்தும்.

## பிள்ளையார் நோன்பினை பற்றிய வாய்மொழி வரலாற்று கதையினை பற்றிவிரிவாக பார்ப்போம்:

முற்காலத்தில் நகரத்தார் சிலர், வாணிபத்தின் பொருட்டு காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து கடற்பயணம் மேற்கொண்டனர். வழியில் அவர்கள் சென்ற கப்பல் புயலில் சிக்கிக் கொண்டது. அன்று கார்த்திகை தீபத் திருநாள். புயலில் இருந்து தங்களைக் காப்பாற்றும்படி தங்கள் கடவுளான மரகதப் பிள்ளையாரை வேண்டிக்கொண்டார்கள். கப்பல் திசை மாறிச் சென்றுவிட்டபோதும், கடலில் மூழ்கிவிடவில்லை. கப்பலில் தாங்கள் உயிருடன் இருந்த ஒவ்வொரு நாளும் விநாயகர் தங்களுக்குத் தந்த பரிசு என்று போற்றி, அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் நாட்களை கணக்கிடுவதற்காக தங்கள் வேஷ்டிகளில் இருந்து ஒரு நூலை எடுத்து பத்திரப்படுத்தினர் 21–வது நாள் அவர்கள் ஒரு தீவில் கரை சேர்ந்தனர். அந்த நாள் கார்த்திகை மாதம் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் அமைந்த நாள்.

தாங்கள் உணவிற்காக பயணத்தில் கொண்டு வந்த அரிசி மாவு, நெய், வெல்லம், முதலியவற்றை கலந்து பிள்ளையார் போல் பிடித்து வைத்து 21 வேஷ்டி நூல்களையும் சேர்த்து திரி போல் செய்து அந்த மாவு பிள்ளையரில் ஏற்றினர். அத்தீவில் கிடைத்த ஆவாரம் பூவைக் கொண்டு பிள்ளையாருக்கு அர்ச்சித்தனர்.

தாங்கள் உணவிற்காக பயணத்தில் கொண்டு வந்த அரிசி மாவு, நெய், வெல்லம், முதலியவற்றை கலந்து பிள்ளையார் போல் பிடித்து வைத்து 21 வேஷ்டி நூல்களையும் சேர்த்து திரி போல் செய்து அந்த மாவு பிள்ளையரில் ஏற்றினர். அத்தீவில் கிடைத்த ஆவாரம் பூவைக் கொண்டு பிள்ளையாருக்கு அர்ச்சித்தனர்.



சில நாள்களில் வானிலை சரியானதும் அவர்கள் ஊருக்குத் திரும்பி நடந்தவற்றை தங்கள் மக்களிடம் கூறினர். அப்போது முதல் வருடம் தோறும் பிள்ளையார் நோன்பை கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுகிறது.

தங்கள் மக்களில் பெரும்பாலோரைக் காப்பாற்றிய மரகத பிள்ளையாரை ஒவ்வொரு வருடமும் கார்த்திகை தீபத் திருநாளில் இருந்து 21 ஆம் நாள், சஷ்டியும் சதயமும் கூடும் நாளில் ஆவாரம் பூவும் அரிசி மாவு பிள்ளையாரும் புத்தம் புது வேஷ்டியின் நூலில் செய்யப்பட்ட திரியைக் கொண்டு விளக்காக ஏற்றி தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் காக்குமாறு பிள்ளையாரை வேண்டுகின்றனர். பின்னர் அந்த மாவு பிள்ளையாரை உண்டு மகிழ்வர்.

## பிள்ளையார் நோன்பின் பின்னணியில் மற்றுமொரு கதையும் உண்டு.

அந்நாளில் புகார் நகரத்தில் தெய்வானை என்ற பெண் ஒருத்தி இருந்தாள். அவளுடைய தாயார் காலமாகி விடவே, தனது மகளின் நலன் கருதி அவளது தந்தை மறுமணம் செய்துகொண்டார். தொடக்கத்தில் குணவதியாக நடந்த சித்தியாக வந்தவள் புத்தி ஓராண்டுக்குள் மாறியது. அவள் தெய்வானையிடத்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொண்டாள்.



தெய்வானையை எப்படியாவது வீட்டை விட்டு வெளியேற்றிவிட வேண்டும் என்று எண்ணி எல்லா வீட்டு வேலைகளை எல்லாம் செய்யச் சொல்லி துன்புறுத்தினாள். அன்று திருக்கார்த்திகையின் முதல் நாள், குளிக்கச் செல்வதற்கு முன்பாக தன்னுடைய வைரத் தோடைக் கழற்றி வீட்டின் இரண்டாங் கட்டில் உள்ள பட்டசாலையில் ஒரு தூணுக்கு அருகில்வைத்துவிட்டுச் சென்றாள். திரும்பி வந்து பார்த்த போது வைரத் தோடு வைத்த இடத்தில் இல்லை. தெய்வானைதான் அதைத் திருடியிருக்கவேண்டும் என்று குற்றம் சாட்டினாள்.

தான் செய்யாத தவறுக்காக இப்படி துன்பத்தை அனுபவிப்பதை விட உயிரவிட்டுவிடலாம் என்று எண்ணி வீட்டை விட்டு வெளியில் வெளியேறி வழியில் உள்ள மரகத பிள்ளையார் கோயிலில் தஞ்சம் புகுந்து பிள்ளையாரிடம் தனது குறைகளை அழுது கொட்டி முறையிட்டாள். பின் இங்கு விநாயகர் சன்னதியில் உண்ணா நோன்பிருந்து தன் உயிரை விட முடிவெடுத்தாள். கோயில் குருக்கள் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதன் பேரில் பிள்ளையாருக்குப் படைத்த தேன், திணை, நெய் இவற்றை மட்டும் சிறிது எடுத்துக்கொண்டு நோன்பிருந்தாள்.



21–வது நாள் மாலை பிள்ளையார் சந்நிதியிலிருந்து எறும்புகள் சாரை சாரையாக வெளியில் வந்தன. அவள் உள்ளுணர்வு அந்த எறும்புகளைப் பின் தொடரச் சொல்லவே எறும்புகளைப் பின் தொடர்ந்து சென்றாள்.

எறும்புகள் இரண்டாம் கட்டுக்குள் தெய்வானையின் சித்தி நகைகள் கழற்றி வைத் தூண் அருகே துளையிட்டு உள்ளே சென்றது. இதை கண்ட செட்டியார் அங்கு வேலையாளை விட்டு தோண்டச்சொன்ன போது அங்கு காணாமல் போன வைரத் தோடு இருந்தது. உண்மை நிலையைக்கண்ட சித்தியும் தன் தவற்றை உணர்ந்து தெய்வானையிடம் மன்னிப்பு கேட்டாள்.

இதை கண்ட மக்களும் சாதாரண ஒரு பெண் இப்படி நோன்பிருந்து, வழிபட்டு இத்தகைய பலனை பெற்றதை பார்த்து அவர்களும் தங்கள் இல்லங்களில் இந்த நோன்பை அனுசரித்து வழிபட்டனர். இப்படி அவர்கள் வழிபட அவர்களுக்கும் தாங்கள் எண்ணியது ஈடேறி குடும்ப ஒற்றுமை மேலோங்கியது. தெய்வானை விரதம் அனுசரித்த அந்த 21 நாள்கள் தான் பின்னால் பிள்ளையார் நோன்பாக மாறியதாகவும் கூறுவதுண்டு.

## இனி இந்த நோன்பு அனுஷ்டிக்கப்படும் முறையை பாப்போம்.

### நோன்பு நாள் :

பல்வேறு ஆண்டுகளாக நகரத்தார்களின் மிகுந்த நம்பிக்கைக்குரிய நோன்பாக கடைபிடிக்கப்பட்டு வரும் பிள்ளையார் நோன்பு, திருக்கார்த்திகையில் இருந்து 21ஆம் நாள் கொண்டாடப் படுவது ஆகும். சஷ்டித்திதியும் சதயநட்சத்திரமும் கூடிவரும் நாளில் இந்த நோன்பு கொண்டாப்படுகிறது.இந்த நோன்பானது மாலையில் அனுஷ்டிக்கப்படும் நோன்பு ஆகும்.



பெரிய கார்த்திகை என்றழைக்கப்படும் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்படும் மறுநாளிலிருந்து பிள்ளையார் நோன்பு விரதத்தை ஆரம்பிக்கின்றனர். ஒவ்வொரு நாளும் நாள் முழுதும் விரதமிருந்து மாலைப் பொழுது சாய்ந்ததும் பிள்ளையாரை வழிபடுகின்றனர். 21ஆவது நாள் முடியும் போது சதயநட்சத்திரமும் சஷ்டி திதியும் ஒன்றாக வரும் நாள் இரவு பிள்ளையாரை வழிபட்டு நோன்பினைப் பூர்த்தி செய்கின்றனர். 21 நாட்களும் வழிபடாவிட்டாலும் கடைசிநாள் அன்று நகரத்தார் அனைவரும் எங்கிருந்தாலும் தவறாது பிள்ளையாரை வழிபட்டு இழையெடுத்துக் கொள்கின்றனர்.

## நோன்பு நடைமுறை :

ஒவ்வொரு நாள் வழிபாட்டின்போதும் புதுத்துண்டு அல்லது புதுவேட்டியிலிருந்து ஒரு சிறிய நூல் இழையை எடுத்து வைக்கின்றனர். இதனை "இழையெடுத்தல்" என்கின்றனர். இவ்வாறு 21 நாட்கள் இழையை எடுத்து வைத்து வழிபடுகின்றனர். இதனால் 21 சிறிய நூலிழைகள் சேர்ந்து விடுகின்றன. இந்த இழைகளை ஒன்றாக்கி, வீட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி பல இழைகளாக நறுக்கி வைத்துக் கொள்கின்றனர். கருவுற்ற பெண்ணிற்கு ஒன்று என்றும் அவளது வயிற்றில் வளரும் பிள்ளைக்கு ஒன்று என்றும் கணக்குப் போட்டுக் கொள்கின்றனர். கைம்பெண்களை மட்டும் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்வதில்லை. எண்ணிக்கையை விடக் கூடுதலாகவோ குறைவாகவோ இழையை நறுக்குவது இல்லை.

குடும்பத்தலைவன் (கணவன்), குடும்பத் தலைவி (மனைவி) மற்றும் பிள்ளைகள் அனைவரும் ஒன்றுகூடி வழிபாட்டிற்கான வேலைகளைச் செய்கின்றனர். பிள்ளையார் நோன்பு அன்று, மாலை நேரம் வீட்டினைக் கழுவித் துடைத்துச் சுத்தம் செய்து பூசையறையில் ஒரு பெரிய கோலம் (தும்பு பிடித்தல்) போடுகின்றனர்.



நகரத்தார் வீடுகளில் எந்த சிறப்பு நிகழ்ச்சியானாலும் (திருமணம், புதுமை, குடிபுகுதல்) தும்பு பிடிப்பது வழக்கம். தும்பு பிடித்தாலேயே விசேடம் தொடங்கிவிட்டது என்பது கருத்து. வீட்டுக்குரிய தலைவியும் மருமகளும் தும்பு பிடிப்பர். வீட்டில் உள்ள பழமையான ஏடுகளை எடுத்து, அதில் சுற்றியிருக்கும் நூல்கயிற்றைப் பிரித்து, அந்த நூல்கயிற்றை பச்சரிசியை அரைத்து எடுத்த மாவில் முக்கி எடுக்கின்றனர். அந்தக் கயிற்றை (தும்பு) ஆளுக்கு ஒரு பக்கமாகப் பிடித்துக் கொண்டு சுவரில் ஒட்டினார் போல் வைத்துக் கொண்டு, ஒரு கையினால் சுண்டி விடுகின்றனர். இவ்வாறாக பூசையறையில் உள்ள சுவரில் இரண்டு இடங்களில் வீடு போன்று மாக்கோலம் போடுகின்றனர். இதனைத் "தும்பு பிடித்தல்" என்று குறிப்பிடுகின்றனர்.



அதன் பின்னர் பூசைக்குத் தேவையான கருப்பட்டி அப்பம், பொரி, அவல், எள்ளுப் பொரி முதலான 21வகை உணவுப் பொருட்களைப் பிள்ளையாருக்குப் படைக்க எடுத்து வைத்துக் கொள்கின்றனர்.



பொங்கலன்று சர்க்கரைப் பொங்கலும், தீபாவளியன்று எண்ணைப் பலகாரங்களும் சிறப்புடையன. பிள்ளையார் நோன்பில் கருப்பட்டியப்பம் சிறப்புடையது. கருப்பட்டியைக் காய்ச்சிப் பாகு எடுத்து அதில் அரிசிமாவையும் சேர்த்து மாவுபிசைந்து அப்பம் சுட்டு வைத்துக் கொள்கின்றனர். இவ்வாறு அப்பம் சுடுவதற்கு எண்ணைய்ச் சட்டியில் மாவை ஊற்றுவதற்கு முன்பு சங்கு ஊதுகின்றனர். பொங்கல் விழாவின் போது, பால் பொங்கி வரும்போது சங்கு ஊதுவோம், பிள்ளையார் நோன்பின்போது சங்கு ஊதிய பின்னரே அப்பம் சுடுகின்றனர்.



ஆவாரம்பூ, கண்ணுப்பிள்ளைப்பூ (கண்ணுப்பூளைப்பூ), நெற்கதிர் இவற்றைச் சேர்த்து ஒரு சிறிய ஆவாரங் குச்சியில் கட்டி இரண்டு பூச்செண்டு தயார் செய்து வைத்துக் கொள்கின்றனர். இந்த ஆவாரம்பூவில் மொத்தம் 21 உறுப்புகள் உள்ளன.

## அதைக் குறித்த பாடல் ஒன்று.

"ஏற்ற இறக்கம் இல்லாத ஒக்கப் பிறந்தவர் இருவர்
உடன் பிறந்தவர் மூவர் செக்கச் சிவந்தவர் ஐவர்
செவ்வாழைப்பழம் மூன்று நமரி வாழைப்பழம் நான்கு
பச்சைப் பாம்புக்குட்டி ஒன்று படமெடுத்த பாம்புக்குட்டி மூன்று"

என்று மொத்தம் 21 உறுப்புகள் ஆவாரம்பூவில் உள்ளன.

குடும்பத்தின் மூத்த செட்டியார் தலைப்பாகை கட்டிக் கொண்டு கையில் ஆவாரம்பூச் செண்டைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்குள் வருகிறார். அவரைப் பின்தொடர்ந்து வீட்டில் உள்ள ஆண்களும் வீட்டிற்குள் வருகின்றனர். மூத்த செட்டியார் பூசையறைக்குள் வந்து பிள்ளையார் அருகில் போடப்பட்டிருக்கும் தடுக்கின் மீது அமர்ந்து கொள்கிறார். பிள்ளையார் கிழக்குப் பார்த்தபடி இருக்கிறார். பிள்ளையாரை (மேற்குப்) பார்த்தபடி, வயது மூப்பு அடிப்படையில் எல்லா ஆண்களும் வரிசையாகத் தடுக்கில் அமர்ந்து கொள்கின்றனர். பெண்கள் உட்கார்வது இல்லை.



வீட்டில் உள்ளோரின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி கருப்பட்டிப் பாகையும் அரிசிமாவையும் பிசைந்து செய்த மாவினால் கூம்பு வடிவில் பிள்ளையார் பிடித்து வைக்கின்றனர். இந்தப் பிள்ளையார் பூசையைச் செய்யும் தலைவன் (பெண்கள் இதைச் செய்யக்கூடாது) இந்தக் கருப்பட்டிப் பிள்ளையாரின் மீது 21 நூலிழைகள் கொண்ட திரியைப் போட்டு நெய் ஊற்றி நுனி வாழையிலையை விரித்து வைத்து அதன் நுனியில் வெள்ளி அகல் விளக்கு வைத்து மலர்ச்செண்டு சாற்றி, தீபம் ஏற்றி வைக்கின்றனர். பிள்ளையாருக்குப் பொரியினால் அபிஷேகம் செய்கின்றர். அபிஷேகம் செய்யும் போது சங்கு ஊதுகின்றனர்.

கருப்பட்டி அப்பம், பொரி, முதலான 21வகைப் பலகாரங்களை நிவேதனம் செய்து, தேங்காய் உடைத்துப் பழம் வெற்றிலை பாக்கு வைத்துப் படைத்துத் தீபம் காட்டி வழிபடுகின்றனர்.



வழிபாட்டின் நிறைவாக, இந்த வழிபாட்டினை முன்னின்று செய்யும் குடும்பத் தலைவன், கூம்பு வடிவான பிள்ளையாரின் உச்சியில் தீபம் எறிந்து கொண்டிருக்கும் போது சோதியுடன் சுடரோடு பிள்ளையாரை எடுத்து அப்படியே தனது வாயினுள் போட்டுக் கொள்கிறார். அவர் ஒவ்வொரு பிள்ளையாராக எடுத்துக் கொடுக்க, வீட்டில் உள்ளோர் அனைவரும் வரிசையாக வந்து பிள்ளையாரை பெற்றுக் கொண்டு தீபத்துடன் தங்களது வாயில் போட்டுக் கொள்கின்றனர். நிறைவாக, பிள்ளையாருக்கு என ஏற்றிவைக்கப்பட்ட பிள்ளையாரையும் குடும்பத் தலைவன் எடுத்து தனது வாயில் போட்டுக் கொள்கிறார். வழிபாடு நிறைவடையும் போதும் சங்கு ஊதுகின்றனர். இந்த நிகழ்ச்சியை "இழையெடுத்தல்" என்கின்றனர். இவ்வாறு இழை எடுக்கும் போது குடும்பத்தினர் விநாயகர் அகவல் படிக்கின்றனர்.



அதனை தொடர்ந்து மறுநாள் மாலை விளக்கு வைத்தபின் விளக்கேற்றி சங்கு ஊதி பிள்ளையாரின் இருபுறமும் வைத்த ஆவாரம்பூ, கண்ணுப்பில்லை பூங்கொத்தை வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு அருகிலுள்ள பிள்ளையார் கோயிலில் பிள்ளையாருக்கு முன் பூங்கொத்தை தட்டியபின் கோயிலின் ஒட்டுக் கூடத்தின் மீது வீசி விட்டு வீடு திரும்புகின்றனர் நகரத்தார்கள்.



தீபாவளி, கார்த்திகை மற்றும் பொங்கலுக்குச் சீர் செய்யும் வழக்கம் போல பிள்ளையார் நோன்பிற்கும் சீர் செய்யும் வழக்கம் உண்டு. சில குடும்பங்களில் தங்க, வெள்ளி விநாயகரைச் செய்து தங்கள் வீட்டுப் பெண்களுக்கு வழங்கும் வழக்கமும் உண்டாம். அந்தப் பிள்ளையாரின் முதுகில் தங்கள் பெயரினைப் பதித்துத் தருகின்றனர்.

## தற்போது பிள்ளையார் நோன்பு :

முன்னாட்களில் வளவுக்குள் பெரியவர்கள், பங்காளிப் பெரியவர்கள் வீடு வீடாக வந்து எல்லார் வீட்டிலும் இழையெடுத்து கொடுக்கும் வழக்கம் இருந்தது. அந்நாளில் வீடுகளில் உள்ளஅனைவரும் ஒன்றிணைந்து தத்தம் வீடுகளில் எளிமையாக உற்சாகத்துடன் கொண்டாடும் விதம் பற்றி நமது வீட்டு பெரியவர்களிடம் கேட்டு பாருங்கள் அவர்கள் கொண்டாடும் விதத்தை கதை கதையாக சொல்லுவார்கள்.



தற்சமயம் கால அருமை, கூட்டு வழிபாட்டுப் பெருமை, சிக்கனம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு பிள்ளையார் நோன்பு வழிபாடானது ( சுழற்சி முறையில் ) ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொருவர் வீடுகளிலும், நகரத்தார் சங்கங்களிலும், திருமண கூடங்களிலும் நடைபெற்று வருகிறது.



நகரத்தார் தம் ஒற்றுமை உணர்வையும், இறைபக்தியையும், சமூக அடையாளத்தையும் வெளிப்படுத்தும் சடங்குகளில் முக்கியமானதும், முதன்மையானதும் " பிள்ளையார் நோன்பு " என்றால் அது மிகையாகாது.

தும்பிக்கையான் மீது நீங்கள் வைக்கும் நம்பிக்கையால் இன்பங்கள் இல்லம் தேடிவரும். நகரத்தார் பிள்ளையார் நோன்பால் வரம், நலம், வாழ்வு யாவும் கொண்டு வளர்ந்தோம் ; வளர்கின்றோம் ; மேலும் செழிப்புறுவோம்.

இந்தக்கட்டுரை பல்வேறு நகரத்தார் தமிழ் ஆளுமைகளின் தரவுகள், மற்றும் நகரத்தார் சமூக இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. காலப்பெட்டகமாக பயன்படும் இக்கட்டுரையில் தொடர்புடைய அனைவருக்கும்  நன்றிகள்.

உண்மைக்காக எதையும் துறக்கலாம்,
ஆனால் எதற்காகவும் உண்மையைத்
துறக்கக் கூடாது.
– சுவாமி விவேகானந்தர்





வலிமையே மகிழ்ச்சிகரமான
நிரந்தரமான வளமான
அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.
– சுவாமி விவேகானந்தர்

# நட்பே சிறப்பு

நட்பு நட்பு நட்பு மழை
நட்பில் நனைவதே எங்கள் நிலை
நட்பைத் தவிர மற்றதெல்லாம்
உன்னதமாக இருந்ததில்லை

காதல் கூட கற்பிழக்கும்
நட்பு என்பது உயிர் வரைக்கும்
தவறான காதல் எங்கும் உண்டு
தவறான நட்பு எங்கு உண்டு?

சாதி மதங்கள் நட்பில் இல்லை
ஜாதகம் பார்த்துச் சேர்வதில்லை
நல்ல நட்பு எளிதுயில்லை
அதைவிடச் சிறப்பு எதுவுமில்லை



பள்ளிக் கால நட்புயெல்லாம்
பாரீஸ் போயும் தொடர்கிறதே
தட்டான் பிடித்த நினைவுகளே
தொலைபேசி வார்த்தையில் நிறைகிறதே

ஆண் பெண் நட்புக்கு ஈடுயில்லை
அந்த நட்புக்கு குறுக்கே கோடுயில்லை
அதை தவறாய் பார்ப்பது ஞானமில்லை
அவர் பார்வையின் வாசலில் ஈரமில்லை



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி



# வாழ்த்தி மகிழ்வோம்...




நமது மின்னிதழ் உளவியல் பகுதி பங்களிப்பாளரும் ஆஸ்திரேலியா – SAKTHI COUNSELING SERVICES – ன் இயக்குனருமான தேவகோட்டையை சேர்ந்த திருமதி.சவுந்திரம் சிதம்பரம் அவர்களுக்கு, அவரது சமுதாய – குடும்பநல ஆலோசனை சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் ஆஸ்திரேலியாவின் AUS – தமிழ் டிவி – Phoenix விருது, அண்மையில் நடந்த AUS – தமிழ் டிவி விருதுகள் 2023 விழாவில் தமிழ் சான்றோர்கள் முன்னிலையில் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

அவரது சமுதாய சேவைகள் மேலும் தொடர நாம் நகரத்தார் மின்னிதழ் சார்பாக நாம் அனைவரும் வாழ்த்துவோமாக !

# மழலை மழைத்துளிகள்..!!!

## ஆலயம் தொழுவோம்




அம்மா எனக்கும் தலை வாரி...
அழகாய் பின்னல் போட்டுவிடு
அக்கா அக்கா இமை ஓரம்...
அஞ்சனம் கொஞ்சம் தீட்டிவிடு
அடடா நேரமும் ஆகிறது ...
அப்பா வரவும் தெரிகிறது
அன்பாய் நாமும் கைகோர்த்து ...
ஆலயம் போய்வரப் பூக்களெடு!

## படிப்பால் உயர்வோம்

பள்ளிக் கூடம் போய்வருவோம்...
பாடங் களையும் படித்திடுவோம்
துள்ளித் திரியும் பருவமிதில் ...
தேடிக் கதைகள் படித்திடுவோம்
பிள்ளைகள் நாமும் தெரிந்துகொள்ள...
பாட்டும் தாளமும் படித்திடுவோம்
அள்ளக் குறையா அறிவுகளை ...
அனுதினம் படித்தே நாம் பெறுவோம்!



குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை. தனது தாய்மொழியை ராகத்தோடு பாடிப் பயில்வது சிறுவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் என்பதோடு பல குழந்தைகள் பயின்று சிறப்படையவும் தமிழ் மொழிக்குப் பெருமைசேர்க்கவும் தொடரும் மழலை மழைத்துளிகள்

கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA




# பிள்ளையார் நோன்பு பலகாரங்கள்

நகரத்தார்களுக்கே உரிய முக்கிய விழாக்களில் மிகுந்த தொன்மையும், பெருமையும் உடைய விழாவாக கடைப்பிடிக்கப்படும் பிள்ளையார் நோன்பு இம்மாதம் க8.12.2023 அன்று வருகிறது. தமிழ்நாட்டில் மட்டுமில்லாமல், அனைத்து நாடுகளிலும் வசிக்கும் நகரத்தார் பெருமக்களால் இந்த "பிள்ளையார் நோன்பு" தவறாமல் கடைப்பிடிக்கப் படுகிறது. பண்டிகை என்றால் பலகாரங்கள் இல்லாமலா ?. இறைவழிபாட்டில் இனிப்பு பலகாரங்கள் முக்கிய இடத்தை வகுக்கின்றன. அந்த வகையில் பிள்ளையார் நோன்பில் கருப்பட்டி பணியாரம், கந்தரப்பம், திரட்டுப்பால் ஆகியன முதன்மை பெறுகின்றன. செட்டிநாட்டு சமையல் என்றாலே அதற்கென்று தனிமுத்திரை தனி ருசி! ஆச்சிகள் அனைவருக்கும் நம் பாரம்பரிய பலகாரங்கள் அத்துப்படி. இருந்தாலும் இன்றைய தலைமுறையினரும் நம் பாரம்பரிய பலகாரங்கள் பற்றி அறிவது தொடரும் நம் பாரம்பரிய பரிணாமத்திற்கு உதவும்.

சுவீட் எடு கொண்டாடு..ஆம் இந்த இதழில் பிள்ளையார் நோன்பு இனிப்பு பலகாரங்கள் செய்முறை பற்றி பார்ப்போம்.

## கருப்பட்டி பணியாரம் :

பிள்ளையார் நோன்பில் முக்கியமாக இடம்பெறுவது கருப்பட்டி பணியாரம். கருப்பட்டி பணியாரம் செய்வது எப்படி என்று முதலில் பார்ப்போம்.



## தேவையான பொருட்கள் :

பச்சரிசி – 1 கிலோகிராம்
கருப்பட்டி – ½ கிலோகிராம்
ஏலக்காய் – 5 எண்ணம்
எண்ணெய் – பொரித்தெடுக்கத் தேவையான அளவு

## செய்முறை :

முதலில் பச்சரிசியை முப்பது நிமிடம் நேரம் ஊற வைக்கவும். பின் தண்ணீரை வடித்து காய்ந்த துணியில் அரிசியை பரப்பி உலர விடவும். இடிக்கும் பதத்தில் அரிசியை எடுத்து மிசினில் கொடுத்து நைசாக இடித்துக் கொள்ளவும். பின் சலிப்பானில் இட்டு சலித்துக் கொள்ளவும்.

கருப்பட்டியை ஒன்றிரண்டாத் தட்டிக் கொள்ளவும். பாத்திரத்தில் ஒன்றிரண்டாக தட்டிய கருப்பட்டியைப் போட்டு சிறிதளவு தண்ணீர் ஊற்றி அடுப்பில் சிம்மில் வைக்கவும். கருப்பட்டி முழுவதும் கரைந்து கரைசலானவுடன் உடன் அடுப்பிலிருந்து இறக்கி விடவும். பின் அதனை வடிகட்டிக் கொள்ளவும்.

கருப்பட்டிக் கரைசலை சிறிது சிறிதாக இடித்து சலித்த அரிசி மாவில் சேர்த்துக் கிளறவும். தேவையான அளவு தண்ணீர் சேர்த்து மாவை இட்லி மாவுப் பதத்தில் தயார் செய்யவும். ஏலக்காயை ஒன்றிரண்டாக தட்டி மாவுடன் சேர்க்கவும். இதுவே பணியாரம் சுடுவதற்கு ஏற்ற பதமாகும்.

வாணலியை அடுப்பில் வைத்து பொரித்தெடுக்கத் தேவையான அளவு எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் காய்ந்ததும் ஒரு குழிக்கரண்டி மாவினை எடுத்து ஊற்றவும். ஒரு புறம் வெந்ததும் திருப்பிப் போட்டவும். பிரவுன் கலர் வந்ததும் எடுத்து விடவும். சுவையான கருப்பட்டி பணியாரம் தயார். இதை காற்றுப்புகாத டப்பாவில் அடைத்துக் கொள்ளவும். இதனை இரு வாரங்கள் வரை உபயோகிக்கலாம்.

## கந்தரப்பம் :



பிள்ளையார் நோன்பு பலகாரங்களில் அடுத்து இடம் பெறுவது கந்தரப்பம். செட்டிநாட்டு பலகார வகைகளில் நிறையப்பேர் விரும்புவதும், முக்கியமானதும் செட்டி மகன் செல்லப்பிள்ளை கந்தனுக்கு பிடித்தமானதுமான கந்தரப்பம். வாருங்கள் இதன் செய்முறையை காண்போம்.

## தேவையானவை :

500 கிராம் பச்சரிசி (2 ½ கப்)
100 கிராம் உளுத்தம் பருப்பு (½ கப்)
400 கிராம் வெல்லம் (2 கப்)
தேங்காய் பூ 2 மேஜைக்கரண்டி
1 தேக்கரண்டி வெந்தயம்
ஏலக்காய் 10.

அரிசி, உளுந்தம் பருப்பு, வெந்தயம் ஆகியவற்றை ஒன்றாக ஊற வைத்து பிறகு தண்ணீர்சிறிதளவு ஊற்றி அரைக்க வேண்டும். பாதி அரைத்ததும் தட்டி வைத்துள்ள வெல்லத்தை அத்துடன் சேர்த்து நன்கு மிருதுவாக அரைபட்ட பின் அத்துடன் தேங்காய்பூ சேர்த்து மேலும் 2–3 நிமிடங்கள் அரைத்து பின் அரைத்த மாவை பாத்திரத்தில் எடுத்து அத்துடன் ஏலக்காயை பொடி செய்து மாவில் போட்டு நன்கு கலந்து, அடியில் தட்டையான(flat bottom) வாணலியை

அடுப்பில் வைத்து எண்ணையை ஊற்றி காய்ந்ததும் அரைத்து வைத்துள்ள மாவை வட்டமான கரண்டியில் எடுத்து எண்ணைக்குள் ஊற்றி அப்பம் மேலெழும்பி வந்ததும், அதை திருப்பி விட்டு வெந்ததும் எடுக்கவும்.

**குறிப்புகள் :**

1) அரிசி பருப்பு முப்பது அல்லது நாற்பது நிமிடங்கள் ஊறினால் போதுமானது.

2) வெல்லத்தை முன் கூட்டியே தட்டி பொடியாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.)

3) மாவு அரைக்கும்போது தண்ணீரை சிறிது சிறிதாக ஊற்றி அரைக்க வேண்டும்

தண்ணீர் கூடி விட்டால் வெல்லம் போட்டதும் இன்னும் அதிகம் இளகி மாவு தண்ணியாகி விடும்.

4) எண்ணை அதிகம் சூடாக இருந்தால் பணியாரம் (அப்பம்) சீக்கிரம் வெந்து உள்ளே வேகாமல் மாவாக இருக்கும்.அதே சமயம் சூடு குறைந்தாலும் எண்ணையை குடித்து விடும் ஆதலால் சரியான அளவில் நெருப்பை குறைத்து வைத்து பணியாரம் சுட வேண்டும். இது எல்லாவித எண்ணை பலகாரத்திற்கும் பொருந்தும்.

5) மாவை அரைத்தவுடனும் கந்தரப்பம் சுடலாம்.சிறிது புளிக்க வைத்தும் சுடலாம் (ருசி குழிப்பணியாரம் போல் இருக்கும்).

6) தேங்காய்ப்பூவை (சேர்த்து) அரைக்காமல் மாவில் நேரடியாக போட்டு கலந்தும் சுடலாம்

7) அதிக இனிப்பு விரும்பாதவர்கள் வெல்ல அளவை குறைத்து கொள்ளலாம்.

## திரட்டுப்பால் :



அடுத்து பிள்ளையார் நோன்பில் இடம்பெறும் இனிப்பு வகை திரட்டுப்பால். இதன் செய்முறை

## தேவையான பொருட்கள் :

பால்–1 லிட்டர்
கருப்பட்டி அல்லது வெல்லம் பொடித்து 1 மேஜைக்கரண்டி

## செய்முறை :

1. பாலை காய்ச்சி பொங்கி வரும்போது மிதமான தீயில் சுண்டக்காய்ச்சவும்.
2. நான்கில் ஒரு பங்காக சுண்டியதும் பொடித்த வெல்லம் அல்லது கருப்பட்டி சேர்த்து பால்கோவா பதம் வரும் வரை கிண்டிக்கொண்டே இருக்கவும்.
3. நன்றாக திரண்டு வந்ததும் கிண்ணத்தில் நெய்த்தடவி அதில் மாற்றி பயன்படுத்தவும். திரட்டுப்பால் ரெடி



கட்டுரையாக்கம் :
உமாராணி சொக்கலிங்கம்
நற்சாந்துபட்டி




இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். ஆச்சிகள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram



# அறுகம் புல் = ஆரோக்கியம்

மழை லேசாகப் பெய்ததும், மறுநாள் எங்கு பார்த்தாலும் 'தளதளவென' அறுகம் புல் முளைத்து, பசுமையாய் தனி அழகுடன் காட்சிதரும்! வழிபாட்டில் அறுகம் புல்லுக்கும் இடமுண்டு. அதையும் தாண்டி, மூலிகை மரபையும் மருத்துவ குணத்தையும் நம் மரபில் அறுகம் புல் பெற்றிருக்கிறது.



அறுகம்புல் சிறு செடி. புல் வகையைச் சேர்ந்தது. புல் இனத்தில் முதலும் மூலமுமானது. பசுமையான அகலத்தில் குறைந்த, நீண்ட கூர்மையான இலைகளை கொண்ட தாவரம். தண்டு குட்டையாக இருக்கும். ஈரமான இடங்களில் வளரும். தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் இது வளரும். இதன் தாவரவியல் பெயர் cynodon dactylon.Poaceae குடும்பத்தை சார்ந்தது. சமஸ்கிருதத்தில் துர்வா என்றும் ஆந்திராவில் ஜெரிக்கி என்றும் கேரளத்தில் கருக்கா என்றும் கர்நாடகத்தில் காரிக ஹால்லு என்றும் அழைக்கிறார்கள்.

அறுகம்புல் எல்லாவித மண்வளத்திலும் வளரும். குறுகலான நீண்ட இலைகளையும், நேராய் வளரும் தண்டுகளையும் உடைய தன்னிச்சையாய் வயல் வரப்புகளிலும் வெட்ட வெளிகளிலும் வளரும் ஒரு புல் வகையாகும். இது சல்லிவேர் முடுச்சுக்கள் மூலமும், விதைகளின் மூலமும் இன விருத்தி செய்யப்படுகிறது.

புல் இனத்திலேயே முதன்முதலில் தோன்றியது அறுகம்புல். இது உறுதியான வேர்களை கொண்டிருப்பதால் புல்லை பிடித்திழுத்தால் மேல்பாதி அறுபட்டு புல் மட்டும் கையில் வரும். வேர் மட்டும் பூமியில் தங்கி மீண்டும் முளைக்கும். அறுபட்டு மீண்டும் உடனே தழைத்து நிற்பதால் இதற்கு 'அறுகம்புல்' எனப் பெயர் வழங்கலாயிற்று. அறுகம்புல்லிற்கு மூதண்டம், தூர்வை, அறுகு, பதம், மேகாரி என பல மூலிகைப் பெயர்களும் உண்டு. நோய்களை அறுப்பதால், இதற்கு 'அறுகு' என்ற பெயர் வந்திருக்கலாம்.

### அறுகும் – ஆன்மீகமும்

பிள்ளையார் சிலைக்கு அறுகம்புல் மாலை அணிவித்து வழிபாடு செய்வது என்பது தொடரும் வழக்கம். இதன் கருவாய் விளங்கும் பொருள்தான் என்ன எனப் பார்ப்போம்.

மனிதனுக்கு பாலுணர்வு சுரப்பி மையம் கொண்டுள்ள இடம் யோக சாஸ்திரத்தில் மூலாதாரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உடலின் சக்தி உயிர்சக்தி எனப்படுகிறது. மூலாதாரப் பகுதியில் தான் உயிர்சக்தியும் மையம் கொண்டுள்ளது. உயிர் சக்திக்கு குண்டலினி சக்தி என்ற பெயரும் உண்டு. பருத்தோற் றமான பருவுடல் ஐவகை பௌதீக கூட்டினால் ஆனது. (மண், நீர், நெருப்பு, காற்று, விண்) ஐந்து பௌதீக கூட்டுத்தோற்றத்தின் மையமும் மூலாதாரமே.



இதனை விளக்க வந்ததுவே ஐங்கரத்தான் வழிபாடு. ஐந்து பௌதீகத்திற்குமான ஆன்மத் தொடர்பினை விளக்கிட மூலாதாரத்தில் ஐந்து கரத்தனை கொண்டு வழிபட்டோரும் உண்டு. வினை தீர வேண்டுமாயின் மூலாதாரத்தில் உள்ள வினைப் பதிவுகள் அழிய வேண்டும் அல்லது கரைய வேண்டும். எனவே வினைதீர அல்லது துன்பம் நீங்கிட ஐந்து கரத்தனை வழிபடு எனப் பெரியோர்கள் உணர்த்தினார்கள். மக்களின் புரிதல் மற்றும் அறிவுத் திறனுக்கொப்ப பல விளக்கங் களும், பழக்கங்களுமாய்த் தொடர்ந்தன.

ஓரிடத்தில் (மூலாதாரத்தில்) வேறூன்றி சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்கினை என்ற உடல் மையப் பகுதிகளிலெல்லாம் பொருந்தி சகஸ்திராரத் தளத்தில் பல நுனிகளாக தழைத்தால் மனித அறிவு அவனுக்கும் உலகிற்கும் நன்மைகளையே செய்திடும் என்பதால் அறிவுக் கடவுளாகவும் ஐந்து கரத்தானை வழிபட்டோரும் உண்டு. அதற்கு அறுகும் பயன்பட்டது.

மொத்தத்தில், முன்னோர் களின் ஒவ்வொரு சடங்கிற்கும் பின்னணியில் வினைத்தூய்மை அல்லது துன்பமில்லா வாழ்வு மனிதன் காண வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தி ருக்கிறது என்பதையும் இங்கு புரிந்து கொள்ளலாம். இத்தகைய நோக்கத்தை அடையச் செய்வதற்கான நற்கல்வி யைத்தான் ஆன்மீகம் என்றும் அழைக்கலாயினர்.

ஓரிடத்தில் ஆகாதது அறுகம்புல்லால் தான் ஆகும் என்பதைப் பற்றி தெரிந்தோ, தெரியாமலோ பல வேண்டுதலோடு பிள்ளையார் சிலைக்கு அறுகம் புல்லை சார்த்துவோரும் உண்டு.

இதில் உள்ள கருத்தினை காணும் போது, தீராத வியாதிகளாக இருந்தாலும், பல மருந்துகள் பல காலங்களாக சாப்பிட்டும் நோய் தீரவில்லை என்றாலும் அறுகை நாடுங்கள் – ஆகாதது ஆகும் – ஆறாதது ஆறும்.

## வீட்டு மருத்துவத்தில் அறுகம்புல்லின் பயன்பாடுகள் :

'ஆல்போல் தழைத்து... அருகு போல் வேரூன்றி...' எனும் வாய்மொழி வழக்கைப் போலவே, அறுகம்புல்லின் ஆரோக்கிய குணங்களும் நம் மண்ணில் ஆழ வேரூன்றியவை.



- நல்ல தளிர் அறுகம்புல்லை சேகரித்து நீரில் கழுகி நன்கு அரைத்து பசும்பாலுடன் சுண்டக்காய்ச்சி நாள்தோறும் இரவில் படுக்கச் செல்லும்முன் சாப்பிட்டு வந்தால் பலவீனமடைந்த உடல் தேறி நல்ல பலம் பெற்றுவிடும். வளர்ந்து வரும் குழந்தைகள் எளிதாக ஊட்டச்சத்து பெற இதே முறையை கையாளலாம்.

- இதிலுள்ள ஒருவகையான புரதக்கூறு, நம் உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிப்பதாக ஆராய்ச்சி முடிவு தெரிவிக்கிறது. மூட்டுகளில் ஏற்படும் வீக்கம், அழற்சி (Anti–arthritic activity) ஆகியவற்றை அறுகம்புல் சாறு குறைப்பதாகவும் ஆய்வு சொல்கிறது. சமீபத்திய ஆய்வில், விந்தணுக்களின் எண்ணிகை, விந்தின் இயக்கத்துக்குத் (Sperm motility) தேவையான ஃபிரக்டோஸ் அளவை அதிகரிப்பதற்கும் அறுகன்சாறு பயன்படுவது தெரிய வருகிறது.

- அறுகம்புல்லுடன் வெண்தாமரை பூவிதழ்களை சேர்த்து கஷாயமாக்கி தினமும் இருவேளை குடித்துவர இதய பலவீனம் நீங்கி, இதயமும், ரத்தக் குழாய்களும் உறுதிபெறும்.

- தீடீரென ஏற்படும் வெட்டு காயம் போன்ற ரண காயங்களுக்கு அரிவாள் மூக்கு என்று சொல்லப்படும் பச்சிலையையும் அறுகம்புல்லையும் சம அளவாக எடுத்து அரைத்துக்கட்டினால் உதிரப்பெருக்கு உடனடியாக நின்றுவிடும். காயமும் வெகு விரைவில் ஆறிவிடும்.

- அறுகம்புல்லையும் தேங்காய் எண்ணையையும் சம அளவு எடுத்துக் கொண்டு அதை உடலில் தேய்த்து அரைமணி நேரம் ஊறவிடவும். அறுகம்புல்லை பொடியாக்கி கடலை மாவுடன் தேய்த்துக் குளித்தால் உடல் கண்ணாடி போல் ஜொலிக்கும்.

- அறுகம்புல்லுடன் மாதுளை இலையை சேர்த்து கஷாயமாக்கி காலை, மாலை இரண்டு வேளையும் 100 மில்லி அளவு குடித்துவர பெண்களுக்கு மாதவிலக்கின்போது ஏற்படும் அதிகப்படியான ரத்தப்போக்கு கட்டுப்படும்.

- அறுகம்புல்லுடன் மஞ்சளும், சுண்ணாம்பும் சேர்த்து அரைத்து நகச்சுற்று உள்ள இடத்தில் பூசிவர வலியும், வீக்கமும் குறையும்.

- அறுகம்புல் வேரையும், அகத்தி வேரையும் இரவு முழுவதும் நீரில் ஊற வைத்து, காலையில் அதனை காய்ச்சி வடிகட்டி குடித்துவர நீர் எரிச்சல், ஆண் குறி எரிச்சல் குணமாகும்.



- அறுகம்புல் 2 பங்கு, கீழாநெல்லி ஒரு பங்கு சேர்த்து அரைத்து, அதை தயிரில் கலந்து குடிக்க சிறுநீர் எரிச்சல், சிறுநீருடன் ரத்தம் கலந்து வெளியாகுதல், உடல் வறட்சி போன்றவை குணமாகும். உடல் வெப்பம் தணியும்.

- அறுகம்புல் வேரை நிழலில் உலர்த்தி பொடியாக்கி நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சிக் கொள்ளவும். இதனை உடலில் தேய்த்து குளித்துவர எல்லாவித தோல் நோய்களும் குணமாகும். அதை, தலையில் தேய்த்து குளிக்க பொடுகுத் தொல்லை நீங்கும். உடல் குளிர்ச்சியாகும்.

- வாயுத் தொல்லை உள்ளவர்கள் அறுகம்புல் சாறு அருந்தி வர, அதிலிருந்து விடுபடலாம். உடல் சூட்டையும் இது தணிக்கிறது.

- உடல் ரத்த சுத்திகரிப்புக்கு அறுகம்புல் சாறு பேருதவியாக உள்ளது.

- அறுகம்புல்லின் கணுக்களை நீக்கிவிட்டு 10 கிராம் அளவு எடுத்து, அதனுடன் வெண்மிளகு 10 சேர்த்து 4 டம்ளர் நீர்விட்டு காய்ச்சி, பாதியாக வற்றியதும், அதில் சிறிதளவு பசு வெண்ணெய் சேர்த்து குடித்துவர, மருந்துகளை உட்கொள்வதால் ஏற்படும் வெப்பம், நீர் கடுப்பு, மூலக்கடுப்பு, வெள்ளைப்படுதல் போன்றவைக் குணமாகும்.

- தீராத வயிற்றுவலிக்கு அறுகம்புல்லுடன் வேப்பிலையை சமஅளவு எடுத்து நீர்விட்டு காய்ச்சி வடிகட்டி 100 மில்லி அளவு குடித்துவர குணமாகும்.

- ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களை அதிகரிப்பதுடன், ரத்தச் சோகை, ரத்த அழுத்தத்தையும் அது சீராக்குகிறது. அறுகம்புல் சாற்றில் வைட்டமின் 'ஏ' சத்து உள்ளது. இதை உட்கொண்டால் உடல் புத்துணர்வு பெறுகிறது. குழந்தைகளுக்கு பாலில் கலந்து கொடுக்கலாம்.

- அறுகம்புல் சாற்றுடன் சிறிதளவு பன்னீர், பப்பாளிப் பழம் சேர்த்து பிசைந்து முகத்தில் தடவி, உலர்ந்தவுடன் கழுவிவர வெயிலால் ஏற்பட்ட கருமை அகன்று முகம் பளபளப்பாகும்.

- யுனானி மருத்துவத்தில் அறுகம்புல் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. இதை முறையாக பதப்படுத்தி கிட்னி ஃபெயிலியர், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு மருந்தாகத் தரப்படுகிறது.

- தினமும் டீ, காபிக்கு பதிலாக அறுகம்புல் சாற்றுடன் தண்ணீர் அல்லது தேன் அல்லது இளநீர் கலந்து சாப்பிடுங்கள். தினமும் காலையில் வெறும் வயிற்றில் தான் இதை குடிக்க வேண்டும். அப்போது தான் பலன் உண்டு.

# பெருமைமிகு பிள்ளையார் நோன்பு

மார்கழி மாத சுக்லபட்ச திதி
சதயத்துடன் கூடிடும் சஷ்டி
நகரத்தார் இழை எடுத்துண்பது
தொன்றுதொட்டு வரும் பண்பு
ஐங்கரன் வழிபாடு பிள்ளையார் நோன்பு

அமர்ந்த கோலத்தில் நம்பியாம்
ஆறுமுகன் அவன் தம்பியாம்
இருந்திட இருவர் கரிசனம்
கிடைக்கும் ஆனந்த தரிசனம்

அவல் பொரி பொரித்து வைத்து
அரிசி நவதானியங்கள் எடுத்து வைத்து
புதுவேஷ்டித் துணியில் நூலெடுத்து
ஒன்று சேர்ந்த இருபத்தொரு நூலிலை
திரட்டுப்பாலில் உண்டு அலாதி சுவை



இழைமாவு பிடித்து வைத்து
பிள்ளையாரை சாட்சி வைத்து
நூலிலையில் தீபம் ஏற்றி
உண்பது அ(பெ)ரிய கலை

முந்தைய நாள் சேர்த்த மாவு
நிறமாய் குலமாய் மணமணக்கும்
ஆச்சிமார்கள் கைப்பக்குவம் சுவைக்கும்
கருப்பட்டி பணியாரம் கரைகட்டி ருசிக்கும்

நடு வீட்டுக் கோலமிட்டு
பால் தேங்காய் பழம் புஷ்பமிட்டு
படைத்து வைப்போம் ஆனைமுகன் தாளில்
செட்டி மக்கள் மேன்மையுருவோம்
இனி வரும் நாளில்!



–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை



# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட பங்கின் பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.

இந்த இதழில்

SWAN ENERGY
Partnerships without Limits

## ஸ்வான்எனர்ஜிலிமிடெட்.

### நிறுவன வரலாறு:

இந்நிறுவனம் 1992 ஆம்ஆண்டுநிறுவப்பட்டது. இந்நிறுவனத்தை ஜேபிகோயங்கா குழுமத்திடம் இருந்து டேவ் வணிக குடும்பத்தார் பெற்றுகொண்டனர். ஸ்வான்எனர்ஜிலிமிடெட். என்பதுஜவுளி, ரியல்எஸ்டேட், எரிசக்தி மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறைகளில் ஈடுபட்டு செயலாற்றிவருகிறது.

நாட்டின் அதிகரித்து வரும் எரிவாயு தேவையை குறைக்கும் வகையில், ஸ்வான் எல்என்ஜி நிறுவனம் கிரீன் ஃபீல்ட் எல்என்ஜி துறைமுக திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. எல்என்ஜிரசீது, சேமிப்பகம், மறுசீரமைப்பு மற்றும் அனுப்புதல் ஆகியவற்றிற்காக மிதக்கும், சேமிப்பு மற்றும் மறு சீரமைப்பு அலகு (எஃப் எஸ் ஆர் யு) ஆகியவற்றைப் பயன்படுத்தி எல்என்ஜி துறைமுக வசதிகளை மேம்படுத்திவருகிறது.

இந்நிறுவனமானது குஜராத்தின் அம்ரேலி மாவட்டத்தில் உள்ள ஜாஃப்ராபாத் கடற்கரையில், எல்என்ஜியின் 10 எம்எம்டிபிஏ (கட்டம் வாரியாக செயல்படுத்தப்படும்) மறு வாயு வாக்கும் திறனைக் கொண்டுள்ளது.

ஸ்வான் எல்என்ஜி ஆனது ஸ்வான் எல்என்ஜி லிமிடெட் ஆல் விளம்பரப்படுத்தப்படுகிறது. மற்றும் 100% பங்கினை வகிக்கிறது. ஸ்வான் எனர்ஜி லிமிடெட் தற்போது மூன்று வணிகப் பிரிவுகளில் உள்ளது– ஜவுளி, ரியல்எஸ்டேட் மற்றும் ஆற்றல். இந்நிறுவனத்தின் பங்குகள் என்எஸ்ஸி மற்றும் பிஎஸ்சி இரண்டிலும் பட்டியலிடப் பட்டுள்ளன. இதன் சந்தை மூலதனம் நவம்பர் 30,2017 அன்று சுமார் 4500 கோடிரூபாய்ஆகும்.

குஜராத் அரசு நிறுவனங்களான குஜராத் கடல் சார் வாரியம் மற்றும் குஜராத் ஸ்டேட்பெட்ரோ நெட் லிமிடெட் ஆகியவை ஸ்வான் எல்என்ஜி இல்முறையே 15% மற்றும் 11% ஈக்விட்டி பங்குகளை வைத்துள்ளது.

எம்ஓஎல் (M O L) என்பது ஒரு முன்னணி கடல் போக்குவரத்து நிறுவனமாகும். இது உலகின் மிகப்பெரிய வணிகக் கப்பற்படைகளில் ஒன்றைச் சொந்தமாக வைத்து இயக்குகிறது. எம்ஓஎல் குழுமம் 31 மார்ச் 2016 நிலவரப்படி 883 கப்பல்களுக்கு சொந்தமானது. தற்போதைய கடற்படைஅளவு 91 எல்என்ஜி கேரியர்களை உள்ளடக்கியது. எஃப்எஸ்ஆர்யு இயக்கத்தின் கடற்படையுடன் எம்ஓஎல்இன் அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை கருத்தில் கொண்டு, எம்ஓஎல் திட்டத்திற்கான தொழில் நுட்ப மற்றும் பங்குதாராக விளங்குகிறது.

11% ஈக்விட்டி பங்குகளை தன் வசம் வைத்துள்ளது மற்றும் தொழில் நுட்ப பங்குதாரராகவும் உள்ளது.

24*7,365 நாட்கள் சிறப்பான செயல்பாட்டுடன் உலகெங்கிலும் உள்ள அனைத்து வகையான எல்என்ஜி கேரியர்களையும் கையாண்டு வருகிறது.

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Market Cap | ₹ 11,381 Cr. | Current Price | ₹ 431 | High / Low | ₹ 464 / 193 |
| Stock P/E | 77.7 | Book Value | ₹ 95.8 | Dividend Yield | 0.02 % |
| ROCE | 2.19 % | ROE | -3.53 % | Face Value | ₹ 1.00 |

## நிறுவனத்தின் நிதி நிலை:

சந்தை மூலதனம் ரூபாய் 11381 கோடி
முகமதிப்பு ரூபாய் 1
புத்தகமதிப்பு ரூபாய் 95
பங்கின் PE விகிதம் 77.7
பங்கின் EPS ரூபாய் 6.78
பங்கின் ROCE 2.19%
பங்கின் ROE –3.53%
ஈவுத்தொகை .02%
கடன் பங்கு விகிதம் 2.04

இந் நிறுவனத்தின் விற்பனையானது கடந்த காலண்டில் (ஜூன் 2023) ரூபாய் 804 கோடியில் இருந்து அதிகரித்து இந்த காலாண்டில் (செப்டம்பர் 2023) ரூபாய் 1223 கோடியையைஈட்டியுள்ளது. வரிக்கு பிந்தைய வருவாய் ரூபாய் 157 கோடியில் இருந்து அதிகரித்து இந்த காலாண்டில் ரூபாய் 178 கோடியை ஈட்டியுள்ளது.

மொத்த வருவாய் கடந்த காலாண்டை விட 12% அதிகரித்துரூபாய் 166 கோடியைஈட்டியுள்ளது. நிறுவனத்தின் இருப்பு கணிசமாக உயர்ந்து வருகிறது.

ப்ரமோட்டர் வசம் உள்ள பங்குகள் எந்த மாற்றமும்இல்லை. FIIS தங்கள் வசம் உள்ள பங்கை 17.56% ஆக உயர்த்தி உள்ளது.

## Quarterly Results:

| | Sep 2020 | Dec 2020 | Mar 2021 | Jun 2021 | Sep 2021 | Dec 2021 | Mar 2022 | Jun 2022 | Sep 2022 | Dec 2022 | Mar 2023 | Jun 2023 | Sep 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sales + | 87 | 98 | 106 | 46 | 59 | 69 | 312 | 260 | 143 | 101 | 933 | 804 | 1,223 |
| Expenses + | 76 | 84 | 70 | 38 | 35 | 57 | 288 | 255 | 142 | 115 | 749 | 567 | 966 |
| **Operating Profit** | **12** | **14** | **36** | **8** | **24** | **12** | **24** | **6** | **1** | **-14** | **184** | **237** | **257** |
| OPM % | 13% | 14% | 34% | 17% | 41% | 18% | 8% | 2% | 1% | -13% | 20% | 30% | 21% |
| Other Income + | 1 | 1 | 2 | 2 | 4 | 1 | -0 | 2 | 3 | 56 | 4 | 4 | 7 |
| Interest | 18 | 10 | 76 | 39 | 51 | 43 | 55 | 49 | 56 | 56 | 62 | 57 | 58 |
| Depreciation | 4 | 4 | 31 | 18 | 18 | 18 | 17 | 18 | 18 | 18 | 27 | 27 | 27 |
| **Profit before tax** | **-9** | **1** | **-69** | **-47** | **-41** | **-48** | **-49** | **-59** | **-70** | **-32** | **100** | **157** | **178** |
| Tax % | 0% | 0% | 14% | 16% | 8% | 17% | 15% | 17% | 17% | 51% | 38% | 8% | 7% |
| **Net Profit +** | **-9** | **1** | **-59** | **-40** | **-37** | **-40** | **-41** | **-50** | **-58** | **-16** | **57** | **145** | **166** |
| EPS in Rs | -0.37 | 0.04 | -1.16 | -0.91 | -1.05 | -0.84 | -0.72 | -1.00 | -1.21 | 0.64 | 0.10 | 2.84 | 3.20 |

## Profit & Loss:

| | Mar 2012 | Mar 2013 | Mar 2014 | Mar 2015 | Mar 2016 | Mar 2017 | Mar 2018 | Mar 2019 | Mar 2020 | Mar 2021 | Mar 2022 | Mar 2023 | TTM |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sales + | 139 | 279 | 333 | 314 | 332 | 351 | 347 | 892 | 341 | 320 | 487 | 1,438 | 3,062 |
| Expenses + | 98 | 235 | 295 | 284 | 304 | 317 | 312 | 814 | 289 | 252 | 419 | 1,207 | 2,397 |
| **Operating Profit** | **40** | **43** | **38** | **31** | **28** | **33** | **35** | **78** | **52** | **68** | **68** | **231** | **665** |
| OPM % | 29% | 16% | 11% | 10% | 8% | 10% | 10% | 9% | 15% | 21% | 14% | 16% | 22% |
| Other Income + | 11 | 12 | 14 | 14 | 7 | 13 | 110 | 19 | 9 | 4 | 7 | 11 | 71 |
| Interest | 9 | 20 | 38 | 30 | 24 | 32 | 58 | 54 | 50 | 108 | 189 | 223 | 233 |
| Depreciation | 4 | 6 | 12 | 10 | 11 | 12 | 14 | 14 | 15 | 42 | 70 | 81 | 99 |
| **Profit before tax** | **38** | **29** | **3** | **5** | **0** | **3** | **73** | **29** | **-4** | **-78** | **-184** | **-62** | **403** |
| Tax % | 30% | 36% | 117% | 43% | 229% | 78% | 25% | 121% | -14% | 12% | 14% | 2% | |
| **Net Profit +** | **26** | **19** | **-0** | **3** | **-0** | **1** | **55** | **-6** | **-5** | **-69** | **-158** | **-61** | **351** |
| EPS in Rs | 1.39 | 0.98 | -0.02 | 0.14 | -0.01 | 0.03 | 2.24 | -0.22 | -0.20 | -2.81 | -5.98 | -2.31 | 6.78 |
| Dividend Payout % | 11% | 26% | -772% | 110% | -582% | 272% | 4% | -46% | -51% | -4% | -2% | -4% | |

| Compounded Sales Growth | |
|---|---|
| 10 Years: | 18% |
| 5 Years: | 33% |
| 3 Years: | 62% |
| TTM: | 290% |

| Compounded Profit Growth | |
|---|---|
| 10 Years: | % |
| 5 Years: | % |
| 3 Years: | % |
| TTM: | 249% |

| Stock Price CAGR | |
|---|---|
| 10 Years: | 21% |
| 5 Years: | 32% |
| 3 Years: | 45% |
| 1 Year: | 63% |

| Return on Equity | |
|---|---|
| 10 Years: | -4% |
| 5 Years: | -6% |
| 3 Years: | -8% |
| Last Year: | -4% |

# Balance sheet:

| | Mar 2012 | Mar 2013 | Mar 2014 | Mar 2015 | Mar 2016 | Mar 2017 | Mar 2018 | Mar 2019 | Mar 2020 | Mar 2021 | Mar 2022 | Mar 2023 | Sep 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Equity Capital | 19 | 19 | 22 | 22 | 22 | 22 | 24 | 24 | 24 | 24 | 26 | 26 | 26 |
| Reserves | 169 | 182 | 409 | 408 | 408 | 409 | 907 | 899 | 890 | 850 | 1,219 | 2,257 | 2,501 |
| Borrowings + | 298 | 426 | 565 | 705 | 817 | 821 | 912 | 1,077 | 1,206 | 3,077 | 4,117 | 4,985 | 5,148 |
| Other Liabilities + | 597 | 803 | 570 | 554 | 538 | 596 | 793 | 1,169 | 1,368 | 985 | 1,035 | 2,956 | 3,277 |
| **Total Liabilities** | **1,083** | **1,430** | **1,565** | **1,690** | **1,785** | **1,848** | **2,636** | **3,170** | **3,489** | **4,936** | **6,397** | **10,225** | **10,952** |
| Fixed Assets + | 103 | 298 | 379 | 373 | 384 | 604 | 577 | 564 | 556 | 2,282 | 2,238 | 4,225 | 4,182 |
| CWIP | 282 | 417 | 450 | 509 | 551 | 313 | 617 | 1,224 | 1,685 | 1,927 | 2,389 | 3,253 | 3,443 |
| Investments | 42 | 9 | 1 | 1 | 2 | 8 | 324 | 149 | 8 | 1 | 3 | 30 | 126 |
| Other Assets + | 656 | 706 | 735 | 807 | 848 | 923 | 1,118 | 1,233 | 1,239 | 726 | 1,768 | 2,717 | 3,200 |
| **Total Assets** | **1,083** | **1,430** | **1,565** | **1,690** | **1,785** | **1,848** | **2,636** | **3,170** | **3,489** | **4,936** | **6,397** | **10,225** | **10,952** |

# Cash Flow:

Consolidated Figures in Rs. Crores / View Standalone

| | Mar 2012 | Mar 2013 | Mar 2014 | Mar 2015 | Mar 2016 | Mar 2017 | Mar 2018 | Mar 2019 | Mar 2020 | Mar 2021 | Mar 2022 | Mar 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Cash from Operating Activity + | 186 | 38 | -159 | -110 | 123 | 69 | 62 | 42 | -95 | 302 | 29 | -491 |
| Cash from Investing Activity + | -187 | -297 | -105 | -61 | -63 | -29 | -533 | -763 | -324 | -2,001 | -494 | -860 |
| Cash from Financing Activity + | 95 | 98 | 256 | 173 | -45 | -29 | 481 | 707 | 427 | 1,760 | 1,309 | 598 |
| **Net Cash Flow** | **94** | **-162** | **-9** | **2** | **15** | **12** | **10** | **-14** | **8** | **62** | **843** | **-752** |

# Ratio:

Consolidated Figures in Rs. Crores / View Standalone

| | Mar 2012 | Mar 2013 | Mar 2014 | Mar 2015 | Mar 2016 | Mar 2017 | Mar 2018 | Mar 2019 | Mar 2020 | Mar 2021 | Mar 2022 | Mar 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Debtor Days | 87 | 61 | 72 | 67 | 64 | 96 | 60 | 17 | 58 | 33 | 160 | 453 |
| Inventory Days | 2,095 | 808 | 710 | 812 | 793 | 790 | 861 | 74 | 206 | 293 | 192 | 89 |
| Days Payable | 141 | 82 | 108 | 85 | 69 | 110 | 384 | 19 | 92 | 67 | 232 | 329 |
| **Cash Conversion Cycle** | **2,041** | **787** | **674** | **793** | **788** | **777** | **536** | **71** | **172** | **259** | **120** | **213** |
| Working Capital Days | 729 | 616 | 423 | 690 | 599 | 228 | 213 | -268 | -461 | -42 | 50 | 237 |
| ROCE % | | 8% | 4% | 3% | 2% | 3% | 3% | 3% | 2% | 1% | 0% | 2% |

# Technical:



## Share holding Pattern:

| | Dec 2020 | Mar 2021 | Jun 2021 | Sep 2021 | Dec 2021 | Mar 2022 | Jun 2022 | Sep 2022 | Dec 2022 | Mar 2023 | Jun 2023 | Sep 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Promoters + | 64.89% | 64.89% | 64.89% | 64.89% | 64.89% | 64.09% | 64.09% | 64.09% | 64.09% | 64.09% | 64.09% | 64.09% |
| FIIs + | 8.16% | 8.11% | 8.09% | 8.07% | 9.01% | 8.50% | 8.59% | 8.46% | 17.16% | 17.13% | 17.12% | 17.56% |
| DIIs + | 3.57% | 3.52% | 3.51% | 3.50% | 3.36% | 2.88% | 2.89% | 2.89% | 2.92% | 2.92% | 2.89% | 2.90% |
| Public + | 23.38% | 23.48% | 23.51% | 23.54% | 22.74% | 24.53% | 24.43% | 24.55% | 15.84% | 15.85% | 15.90% | 15.45% |
| No. of Shareholders | 6,968 | 6,290 | 6,884 | 11,139 | 11,502 | 9,929 | 13,997 | 14,410 | 16,227 | 18,760 | 19,493 | 40,019 |

## Peer comparison:

| S.No. | Name | CMP Rs. | P/E | Mar Cap Rs.Cr. | Div Yld % | NP Qtr Rs.Cr. | Qtr Profit Var % | Sales Qtr Rs.Cr. | Qtr Sales Var % | ROCE % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Swan Energy | 431.25 | 77.73 | 11381.41 | 0.02 | 165.56 | 364.64 | 1223.26 | 752.62 | 2.19 |
| 2. | TTK Healthcare | 1365.00 | 30.12 | 1928.80 | 0.74 | 16.01 | 102.40 | 185.77 | 9.41 | 10.06 |
| 3. | Rossell India | 492.60 | 159.94 | 1856.90 | 0.08 | 24.42 | -32.65 | 118.82 | -0.30 | 10.07 |
| 4. | Andrew Yule & Co | 31.30 | | 1530.43 | 0.02 | -5.27 | -125.87 | 87.99 | -24.19 | 3.77 |
| 5. | Andhra Sugars | 109.85 | 12.97 | 1488.83 | 1.79 | 19.55 | -56.98 | 517.90 | -15.06 | 15.97 |
| 6. | Empire Inds. | 1025.00 | 17.09 | 615.00 | 2.45 | 8.06 | 3.20 | 153.53 | -16.61 | 15.54 |
| 7. | Saakshi Medtech | 236.05 | 33.67 | 416.78 | 0.00 | 5.54 | | 61.29 | | 33.26 |
| | Median: 11 Co. | 236.05 | 33.67 | 615.0 | 0.02 | 5.54 | -14.72 | 118.82 | -15.84 | 10.07 |

## Mutual fund holdings:

**Quant Infrastructure Direct-G**
Equity: Sectoral-Infrastructure
5 ★

| 46.27 | 4.66% | ↑100.00 |
|---|---|---|
| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

**Quant Flexi Cap Direct-G**
Equity: Flexi Cap

| 38.56 | 1.78% | ↑100.00 |
|---|---|---|
| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

**Quant Quantamental Direct-G**
Equity: Thematic

| 30.85 | 2.82% | ↑100.00 |
|---|---|---|
| Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |

*MF Ownership as on 31 October 2023*

View all Mutual Fund Schemes »

| Fund Name (Portfolio as on 31-10-2023) | Category | Rating | Number of shares | %Change in Shares (MOM basis) | % of AUM | Amount Invested (in ₹ Cr) |
|---|---|---|---|---|---|---|
| Quant Infrastructure Direct-G | Equity: Sectoral-Infrastructure | ★★★★★ 46.27 | 1200000 | 100.00% | 4.66% | |
| Quant Flexi Cap Direct-G | Equity: Flexi Cap | ★★★★★ 38.56 | 1000000 | 100.00% | 1.78% | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Quant Quantamental Direct-G | Equity: Thematic | ★★★★★ 30.85 | 800000 | 100.00% | 2.82% |
| Nippon India Nifty Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 1.66 | 43068 | 5.77% | 0.23% |
| Motilal Oswal Nifty Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 1.04 | 27039 | 5.65% | 0.23% |
| SBI Nifty Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 0.77 | 19844 | 6.70% | 0.23% |
| ICICI Pru Nifty Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 0.42 | 10877 | 7.76% | 0.23% |
| HDFC NIFTY Smallcap 250 ETF-G | Equity: Small Cap | ★★★★★ 0.21 | 5331 | 15.67% | 0.23% |
| HDFC NIFTY Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 0.16 | 4142 | 15.86% | 0.23% |
| Motilal Oswal Nifty 500 Index Direct-G | Equity: Flexi Cap | ★★★★★ 0.11 | 2954 | 3.14% | 0.02% |
| Edelweiss Nifty Smallcap 250 Index Direct-G | Equity: Small Cap | ★★★★★ 0.04 | 909 | 14.92% | 0.23% |
| ICICI Pru S&P BSE 500 ETF-G | Equity: Flexi Cap | ★★★★★ 0.03 | 691 | 5.02% | 0.02% |
| Groww Nifty Total Market Index Direct-G | Equity: Flexi Cap | ★★★★★ 0.01 | 162 | 100.00% | 0.02% |
| Motilal Oswal Nifty 500 ETF-G | Equity: Large Cap | ★★★★★ 0.01 | 129 | 0.00% | 0.02% |
| HDFC S&P BSE 500 Index Direct-G | Equity: Flexi Cap | ★★★★★ 0.00 | 104 | 14.29% | 0.02% |
| HDFC S&P BSE 500 ETF-G | Equity: Flexi Cap | ★★★★★ 0.00 | 36 | 0.00% | 0.02% |

**எமது பரிந்துரை:**

**இந் நிறுவனத்தின் பங்குகளை தற்போதைய சந்தை விலையான ரூபாய் 415 மற்றும் குறையும் தருவாயில் ரூபாய் 340 வரைவாங்கலாம். இதன்இலக்குரூபாய் 550, 600, 650++++ காலவரையறை 18 முதல் 24 மாதங்கள்**

## இந்த மாத குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள்:

- Savera Industries Ltd...Entry 130.
  Accumulate more till 110. Target 150 and 170
- Taneja Aerospace and Aviation Ltd... Entry 280.
  Accumulate more till 220. Target 330 and 380
- KPT Industries Ltd... Entry 540.
  Accumulate more till 480. Target 620 and 680
- National Plastic Industries Ltd... Entry 320.
  Accumulate more till 280. Target 360 and 400
- Tata Chemicals Ltd... Entry 950.
  Accumulate more till 880. Target 1100 and 1200
- Gujarat State Fertilizers &Chemicls Ltd...Entry 190.
  Accumulate more till 140. Target 220 and 260.

### பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்த விதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young generation" can learn and start doing analysis and entering in potential stock @ Correct Entry / CorrectExit to win the Trade and Investment in turn around stocks to create wealth by their own in reasonable period of time.**

**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
Saturday 9th December 2023(Week End) and
Tuesday 19th December 2023(Week Days)

**Webinar Timings** India Time:in 17:00 Hrs/17.30Hrs to 18.00Hrs/18.30Hrs (In-Week days / Week-Ends).

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# சிறுவாபுரி நகரவிடுதி மாதந்திர கிருத்திகை வழிபாடு



நமது சிறுவாபுரி நகர விடுதியில் ஐப்பசி மாத கிருத்திகை 30/10/2023 திங்கக்கிழமை அன்று நடைபெற்றது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு வேலுக்கு அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு மஹா தீபாராதனையும் நடைபெற்றது.

பக்தர்கள் திரளாக கலந்த இந்த நிகழ்வில் காலை மற்றும் மதியம் அன்னதானம் உபயதாரர்கள் வேந்தன்பட்டி திரு.R.M.மீனாச்சிசுந்தரம் செட்டியார் குடும்பத்தினர், தேவகோட்டை திரு.RM.சேவுகன் செட்டியார் குடும்பத்தினர் மற்றும் கீழச்சிவல்பட்டி திரு.M.முத்துக்குமார் செட்டியார் (முருகன் மெடிக்கல், கொரட்டூர்) குடும்பத்தினர்சார்பில் நடைபெற்றது.

வழிபாடு ஏற்பாடுகளை நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் குழுவினர் செய்திருந்தனர். நகரத்தார் பெருமக்கள் சிறுவாபுரி மாத கிருத்திகை வழிபாட்டு அன்னதான நிகழ்வில் பங்கு கொள்ள பின்வரும் நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் அமைப்பின் அங்கத்தினர்களை தொடர்பு கொள்ளலாம்.

திரு.SP சிதம்பரம் புரவலர் (9444274720)
திரு.K.சிதம்பரம் தலைவர் (9080264411)
திரு.PR.மீனாட்சிசுந்தரம் செயலாளர் (9444183688)
திரு.முத்தையா சம்பத் பொருளாளர் (9710066980)

# கணபதியை கை தொழுவோம்

அம்மை அப்பனே அகிலம்
என்பதனை உலகிற்கு உணர்த்திய
ஓங்காரத் திருவுருவாம் – ஆனைமுகன்
அடிதொழுவோருக்கு அல்லல் போகும்
ஆனந்தம் பெருகும் வாழ்வில்
இன்பம் பொங்குமே எந்நாளும்!

அன்போடு கொஞ்சம் அறுகம்புல்
ஆசைக்கு அவல்பொரி கொழுக்கட்டை
அர்ப்பணிக்கும் அடியார் தமக்கு
ஐந்து கரமும் அபயம் தந்திடும்
ஆபத்து விலகிடும் – வாழ்வில்
அதிர்ஷ்டம் பெருகுமே எந்நாளும்!

ஆசனங்கள் முத்திரைகள் ஆயிரம்
யோகசாதனைகள்– அவசியமில்லை
எளிய தோப்புக்கரணமே போதும்!
தொந்திக் கணபதி முந்தித் தருவார்
வரங்கள் பலவும் – வாழ்வில்
வசந்தம் பெருகுமே எந்நாளும்!

ஔவையார் அருந்ததி அகத்தியர் முனிவரோடு
சம்பந்தர் நம்பியாண்டார் நம்பி ...என்று
கணக்கற்றோர் கஜமுகன் அருள் பெற்றோர்.!
கந்தனுக்கு மூத்த நம் கருணைமிகு
கணபதியை கை தொழுவோருக்கு
தொல்லைகள் எல்லாம் விலகும் – வாழ்வில்
தொடர் வெற்றியே எந்நாளும் ..

– வே.செல்வகணேசன்
தூத்துக்குடி



# கேது பகவான் தரும் ராஜ யோகம்!

–ஜோதிடர் எல்லி.
9894176494

பிள்ளையாரின் மறு உருவமாக ஜோதிடத்தில் வணங்கபெறும் கேது பகவான் நவகிரகங்களில் வலிமை மிக்கவர்.

சாயா கிரகம்! நிழல் கிரகம்! சொந்த வீடு கிடையாது. தான் அமர்ந்த வீட்டின் பலனையும், தான் பெற்ற நட்சத்திர சாரநாதன் நிலையை பொறுத்தும் பலன் தருபவர். நின்ற வீட்டின் ஆதிபத்தியம் காரகம் சார்ந்த பலன்களையும் அளிப்பவர். கேது பகவானின் நட்சத்திரங்கள் அசுபதி, மகம், மூலம் ஆகும்.கேது என்றதும் ஜோதிடம் அறிந்த பலருக்கும் உள்ளுக்குள் ஒரு வித விதமான நடுக்கம் பயம் ஏற்படும்.

கேது தசா புத்தி களில் ஜாதகருக்கு வாழ்வில் அடுத்து என்ன நிகழுமோ? என்கிற பதட்டமும் நிம்மதி, மகிழ்ச்சி இனி நீடிக்குமா? என்கிற மனக்கவலை யும் உருவாகி விடுகிறது.



கேது தசா ஜாதகரை பாடாய் படுத்தி புடம் போட வைப்பதுதான் காரணம். தன்னுடன் வாழ்வில் பயணிக்கும் மனிதர்கள் சுய ரூபத்தை கேது தசா ஜாதகருக்கு உணர்த்தி விடுகிறது. அதிலும் ரிசபம், மிதுனம், கன்னி, துலாம் லக்னகார்கள் படும் துன்பம், கவலைகளுக்கு அளவே இல்லை எனலாம்.

வாழ்வில் வீண் பழி சுமத்தபட்டு சிறை செல்லும் நிலையும் சிலருக்கு உண்டாகிறது.வாழ்வின் இன்னொரு கோணத்தை முழுதாக இவர்கள் உணர்ந்து விடுகிறார்கள். அதிலும் இளவயதில் வரும் கேது தசா பிஞ்சிலே பழுத்து ஞானி நிலைக்கு ஜாதகரை தள்ளிவிடும்

கோயில், பக்தி ஈடுபாடு, ஆன்மீக ஆராய்ச்சி, பிரபஞ்ச தேடல்கள் னு ஜாதகர் திரிவதை பார்த்து சொந்த பந்தங்கள், நண்பர்கள் வியந்து போவார்கள்.வாழ்வில் மிக நல்ல படிப்பினைகளை ஜாதகருக்கு கொடுத்து விடுகிறது கேது பகவான் தசா.

ஏன் கேது பகவான் இதுமாதிரியான பலன்கள் கொடுக்கிறார் ? அவர் ஜாதகருக்கு ராஜ யோகங்களை அளிப்பாரா? எனும் கேள்விகளுக்கு பதில் அறிய வேண்டும் எனில்

முதலில் கேது பகவான் யார்? என்பதை பார்க்கலாம்.

கேது
ஞானகாரகன்!
மோட்ச காரகன்!
தாய் வழி பாட்டனுக்கும் இவரே காரகன்!



தியானம், மௌனம், வைராக்கியம், நிதானம் இவற்றிற்கும் காரகன் கேது. வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமை, பற்றற்ற நிலை, இல்லறம் சுகபோகங்களை வெறுப்பது.உறவுகளை துறப்பது இவற்றை யும் கேது பகவானே செயல்படுத்துகிறார்.

எந்த நோக்கமும் இல்லாத வாழ்வியல்,நாடோடியாக, பரதேசி யாக அலைவது இதுவும் கேதுவின் சாராம்சம் ஆகும். தன்னுடன் சேர்ந்த கிரகத்தில் காரகத்துவம் மற்றும் அதன் ஆதிபத்தியத்தை முடக்கி விடுவார். மனதை ஒடுங்க செய்பவர்.விஞ்ஞான ஆய்வுக்கும், மெய்யியல் தேடலுக்கும் ஜாதகரை வழி நடத்துபவர் கேது.

அதீதமான தவம்.பக்தியின் உச்சம்! மதம் சார்ந்த ஆய்வுகள்! இவைகளை செய்ய தூண்டுபவர் கேது! ராகு சனியை போலவும் கேது செவ்வாய் போலவும் பலன்கள் அளிப்பார்கள் என்பது ஜோதிட விதி!

இயற்கை அசுபராக இருக்கும் கேது பகவான் உயரிய யோகத்தினையும் கொடுப்பார். கேது வின் ஆற்றல் ஒரு ஜாதகருக்கு முழுமையாக கிடைக்கும் போது அவர் ஆழ்ந்த உள்ளுணர்வு அடைகிறார்! நடக்க போவதை உணரும் ஆற்றலை பெறுகிறார்! பிரபஞ்ச சக்தியோடு தொடர்பு கொள்கிறார்!



ராகு மானுட வாழ்வின் உள்ள சுகபோகங்களை சுவைக்க செய்பவர். கேது அதிலிருந்து விடுபட்டு பிரபஞ்ச சக்தி யை அடைய உதவுபவர்.

கேது பகவான் தரும் ராஜ யோகத்தில் முதன்மையானது கேள யோகம்

இது எவ்வாறு அமையும் என்பதை பார்க்கலாம். கேது இயற்கை சுபரான குரு பகவானுடன் இணைந்து ஜாதகத்தில் இருக்கும் போது கேள யோகம் உண்டாகும்.



இந்த சேர்க்கை கோணங்களில்(1,5,9 போன்ற வீடுகளில்) அல்லது கேந்திர(1,4,7,10) வீடுகளில் அமைவது சிறப்பு.இந்த யோகம் பெற்ற ஜாதகர் பக்தி மார்க்கத்தில் தீவிரமாக இருப்பார். இதில் குரு பகவான் சுபத்துவம் பொறுத்து சிலருக்கு மடாதிபதி, தர்மகர்த்தா ஆகும் பாக்கியமும் கிடைக்கிறது.

மேலும் இந்த அமைப்பு பெற்ற ஜாதகர் செல்வ செழிப்புடன் வாழ்வார். ஒன்பதாம் பாவகத்தில் இந்த யோகம் அமையும் போது தந்தையார் சொத்துக்கள் ஜாதகருக்கு வந்து சேரும், சமூகத்தில் நற்பெயர், மரியாதை உண்டாகும். ஆனாலும் ஜாதகருக்கும் அவரின் தந்தைக்கும் இடையே நல்லுறவு உண்டாவது இல்லை, புரிதல் இல்லாமல் இருக்கலாம்.

இந்த அடுத்து கேது பகவான் அளிக்கும் யோகம் தெய்வீக ஆற்றல். லக்னத்திற்கு 5 ல் சுபத்தன்மையுடன் கேது அமர்வது ஜாதகருக்கு முக்காலத்தையும் உணரும் ஞானம் உண்டாகும்.

வருங்காலம், கடந்த காலம், மற்றும் நிகழ்காலத்தை யும் துல்லியமாக கண்டறியும் ஜோதிடக்கலையில் திறமை பெற்றவராக ஜாதகர் இருப்பார். இதற்கு இயற்கை சுபரான குரு பகவான் பார்வை கேது விற்கு கிடைக்க வேண்டும்.



புத்தி பூர்வ புண்ணிய ஸ்தானமாகிய ஐந்தில் கேது அமரப்பெறுவது இறுதிக்காலத்தில் இல்லறத்தை துறந்து ஞானியாக மாறும் நிலை ஜாதகருக்கு ஏற்படும்.

அடுத்ததாக கால சர்ப்ப யோகம்


அனைத்து கிரகங்களும் ராகு கேது களுக்கிடையே இருந்து கேதுவிற்கு குருவின் பார்வை கிடைக்கும் போது காலசர்ப்ப யோகம் உண்டாகும்.



இந்த யோகம் ஒருவருக்கு தன் வாழ்நாளில் பிற்பாதியில் தான் உண்டாகும். இந்த யோகத்தை எவரும் தடுக்க இயலாது. புகழ், செல்வம், சமூக அந்தஸ்து என அனைத்தையும் ஜாதகர் அனுபவிப்பார். பகைவரை வெல்லும் ஆற்றலையும் திடீர் அதிர்ஷ்டம், புதையல் யோகத்தினை யும் இதன் மூலம் கேது பகவான் ஜாதகருக்கு கொடுத்து விடுவார்.

இதுவரை இயற்கை அசுபராக நாம் அறிந்து வந்த கேது பகவான் ஒரு ஜாதகருக்கு எவ்வாறு யோகத்தினையும் கொடுக்கும் என்பதை அறிந்து கொண்டோம்.

மற்றுமொரு ஜோதிட தகவலுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.
வாசகர்கள் அனைவருக்கும் 2024 – ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.



திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரை சேர்ந்தவர் ஜோதிடர் எல்லி. சட்டம் பயின்ற இவர் ஜோதிடம், தத்துவம், வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். ஜோதிடம் தொடர்பான ஆய்வுகள், கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர். தொடர்புக்கு :9894176494

தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.



– சுவாமி விவேகானந்தர்

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534
naamnagarathar@outlook.com

# நாம் நகரத்தார்

**சமூக இணையதள மின்னிதழ்**

**நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல் மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின் பெட்டகமாக ஓர் மின்னிதழ்.**

**மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும் உங்கள் கைபேசி வாயிலாக...**

**நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள் மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,**

# 97917 76534

www.naamnagarathar.com